TRUE WISDOM.

மெய்ஞ்ஞானம்.

தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இக்கப பிரபஞ்ச ஞானத்தையோ அல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்ச பிரபுக்களுடைய ஞானத்தையும் அல்ல; பராபரன் நம்முடைய மகிமைக்காக லோகத் தோற்றத்துக்கு முன்னே குறித்ததும் மறைக்கப்பட்டதுமாயிருந்த தெய்வ இரகசியமான ஞானத்தையே பேசுகிறோம். க கொரி. உ, சு. எ.

2. STEREOTYPE EDITION.

Tranquebar,

PRINTED AT THE EVANG. LUTH. MISSION PRESS.
(REV. TH. NAETHER.)

1887.

BOOKS & TRACTS

PUBLISHED BY THE

EVANG. LUTHERAN MISSION SOCIETY

Orders to be addressed to

TRANQUEBAR, Rev. Th. Naether.

11569

I.

☞ **On 10 copies of one and the same Book 1 Copy gratis.**

☞ ஒரு புஸ்தகத்திலே ஒரேயடியாக ௰ பிரிதி வாங்குகிறவர்களுக்கு க பிரிதி அதிகமாகக் கொடுக்கப்படும்.

Luther's Smaller Catechism. ஞான உபதேசக் குறிப்பிடம்.	0	1	0
Schwarz, Catechism. சிறுவருக்காகச் செய்யப்பட்ட ஞான உபதேச வினாவிடை.	0	2	0
Spener's Catech. மா. லுத்தர் என்பவரின் ஞான உபதேசக் குறிப்பிடத்தை விஸ்தரிக்கும் வினாவிடைகள்.	0	4	0
Schanz, ஞான உபதேச குறிப்பிடத்தைச்சார்ந்த வேத வாக்கிய பூமாலை.	0	4	0
Dietrich, Catechism. ஞான உபதேச விஸ்தரிப்பு.	0	8	0
Concordia I. ஒருமிப்பு. சுவிசேஷ லுத்தரன் சபையார் ஒருமித்து அங்கிகரித்திருக்கிற விசுவாச அறிக்கைகள்.	1	2	0
Concordia II. ஒருமிப்பு. உ-ம் பங்கு.	1	2	0
Augsb. Confession. அகுஸ்தாபுரி விசுவாச அறிக்கை.	0	4	0
Ziegenbalg, Theologia Thetica. வேதசாஸ்திரம்.	0	12	0
Graul's Distinctive Doctrines with an Abridgment of the Book of Concord. போதக வித்தியாசம். இதில் மெய்ப்போதக சாரம் அனுபந்தமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. உ-ம் பதிப்பு.	0	4	0
Synopsis evangelica. சுவிசேஷக நாற்சந்தி.	0	2	0
Hutter. Compendium. தேவசாஸ்திரப் பொழிப்பின் மொழிபெயர்ப்பு.	0	8	0
Script. Hist., O. T. வேதசரித்திரம் பழைய ஏற்பாடு.	0	5	0
Questions on the O. T. வேதசரித்திர வினாவிடை. பழைய ஏற்பாட்டின் சரித்திரம்.	0	1	0
Script. Hist., N. T. வேதசரித்திரம். புதிய ஏற்பாடு.	0	4	0
Sacred History I. பரிசுத்தசரித்திரம். முதற்பங்கு.	0	10	0
Sacred Hist. II. பரிசுத்தசரித்திரம். இரண்டாம் பங்கு.	0	6	0

மெஞ்ஞானம்.

சத்திய வேதத்தைப் போதிக்குங் குருமார்கள் மெஞ்ஞானத்தை ஆசிக்குந் தமிழர் அனைவருக்கும் ஆசீர்வாதமுண்டாக வாழ்த்தி வெளிப்படுத்துகிற மெஞ்ஞானப் பிரமாணமாவது:

க.

அக்கியானம்.

சர்வலோகத்தையும் நம்மெல்லாரையும் உண்டாக்கின ஒன்றான கர்த்தர் நாம் எல்லாருந் தம்மை அறிந்து, மோட்சத்துக்கு ஆளாகச் சித்தமாயிருக்கிறார். இதற்கென்று அவர் தம்முடைய சத்தியவேதத்தை அருளிச்செய்து, இதற்கான வழியை மனிதருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தச் சுகிர்தமான வழியை நீங்களும் அறியும்படிக்கு அவருடைய திருச்செயலினால் நாங்கள் இந்தத் தேசத்தில் வந்து, உங்கள் பாஷையைப் படித்தறியும்போது, உங்கள் முன்னோர்கள் எழுதிவைத்த வேதசாஸ்திரங்களை நீங்கள் நம்பி மோசம் போகிறீர்களென்று கண்டு பரதபிக்கிறோம்.

ஆனபடியினாலே ஆண்டவர் எங்களுக்கு உதிக்கப்பண்ணின வெளிச்சம் உங்களுக்கும் பிரகாசிக்கும்படிக்கு, நாங்கள் அவரை நோக்கி வேண்டிக்கொண்டு, எங்களாலானமட்டும் இதற்காக உங்களுக்கு உதவியாயிருந்து, அவரால் எங்களுக்குக் கிடைத்த சுகிர்தமான உபதேசத்தை உங்களுக்குந் தெரியக் கொடுக்க விருப்பமாயிருக்கிறோம்.

நாங்கள் உங்களெல்லாரையுங் கண்டுபேசக் கூடாததால், நீங்கள் அறிய வேண்டிய தெய்வ நியாயங்களை இந்தப் புஸ்தகத்தைக்கொண்டு உங்களுக்குத் தெரியக்கொடுக்கிறோம்.

கர்த்தர் தம்மையும் தம்முடைய சித்தத்தையும் பற்றிய உபதேசத்தை இந்த வழியாய் உங்களுக்கு வெளிப்படுத்தும்

அவருடைய விசேஷித்த தயவையும், நீங்களும் உங்களுடைய நன்மையைத் தேடி, உங்கள் பேரிலே வைத்திருக்கிற பட்சத்தையும் நீங்கள் அறிந்து, இந்தப்புஸ்தகத்தில் அடங்கியிருக்கிற நியாயங்களை மேன்மையாக எண்ணி ஒப்புக்கொண்டால், அதினாலே வெகு பலன்களைப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்புங்கள்.

இவ்வுலகத்திலுண்டான மனிதரையும் அவர்களுடைய நடக்கைகளையும் வழிபாடுகளையும் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் மெய்ஞ்ஞான அறிவு மெத்த அபூர்வமென்று காண்கிறோம். மெய் பொய், பாவம் புண்ணியம், மோட்சம் நரகம் ஏதென்றறியாதவர்கள் மிச்சம். ஏனெனில் மனிதர் தங்கள் புத்திமயக்கத்தினால் ஒன்றான கர்த்தரை அறியாமல், பொய்த்தேவர்களைத் தாங்கள் தானே உண்டாக்கி, விக்கிரகங்களை வைத்துக்கொண்டு, அதற்குப் பூசை புனஸ்காரம் பண்ணி, அதுகளை வணங்கி, லோகமயக்கம் சர்வமயக்கமாய்த் திரிகிறார்கள்.

பராபரவஸ்து தம்மையும மோட்சவழியையும் வெளிப்படுத்துகிற சத்திய வேதத்தை அருளிச்செய்திருந்தும், அதைக் கண்டறியாமல், நீங்களும் உங்களுக்குள் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெட்டுப் புராணம் என்கிறவைகளை நம்பி, மயங்கி, பலபத்திக்காரராய்ப் போனீர்கள். ஞானம் பரிசுத்தம் நீதியுள்ள கர்த்தருக்கு ஏற்கும் ஆராதனையைப் பண்ணாமல், உங்கள் சுயமனதுக்கும் ஆசை இச்சைக்குஞ் சந்தோஷமாயிருக்கிறதுகளை விரும்பி மோசம்போகிறீர்கள்.

சிருஷ்டிகரை மறந்து, சிருஷ்டிப்புகளைத் தெய்வமென்றுசொல்லி, ஒன்றுக்கும் ஒப்பிடக்கூடாத ஆவியாயிருக்கிற கர்த்தருக்குப் பதிலாகப் பொன் வெள்ளி வெண்கலம் மரம் மண் கல்லு இது முதலானதுகளால் செய்விக்கப்பட்ட சிலைகளையுஞ் சுரூபங்களையுங் கோவில்களில் வைத்துக்கொண்டு, தேவர்களாகக் கும்பிடுகிறீர்கள். விக்கிரகத்துக்குத் தலையிருந்தும், அசைக்கக் கூடாது. உள்ளாகப் புத்தியும் அறிவுமில்லை. புறம்பே கண் காது வாயிருந்தும், பார்க்கவுங் கேட்கவும் பேசவுங் கூடாது. அதற்கு இரண்டு நாலு பத்து கையிருந்தாலும், நமக்கு ஒத்தாசை பண்ணவும் ஒரு அற்ப உபகாரத்தை முதலாய்ச் செய்யவும் ஒரு இக்கட்டிலே நின்று இரட்சிக்கவுங் கூடாது. அதுக்குக் காலிருந்தும், நடக்கக் கூடாது.

அதுக்குச் சுவாசமுஞ் சீவனும் பெலனுமில்லை என்று நீங்கள் அறிந்து, கேடகத்திலும் வாகனத்திலும் தேரின் பேரிலும் படிச்சட்டங்களின் பேரிலும் வைத்து, அந்த விக்கிரகம் விழாதபடிக்குக் கச்சுக்கயிறு போட்டுக் கட்டி, தீவட்டி மத்தாப்புகளினாலும் பல மேளவாத்தியங்களினாலும் ஆடல் பாடல்களினாலும் தேருந் தெருவுஞ் சிறப்பாக்கிக் கொண்டு, எழுந்தருளப்பண்ணி, கோபுரவாசல்வந்தவுடனே கர்ப்பூரதீபங்காட்டி, முன்னிருந்த நிலைமையிலே கொண்டு போய்வைத்து, அதுக்கு அங்கே தினந்தினம் புளிக்காப்பிடுகிறீர்கள். பத்திரகிரி இராசா சொல்லுகிறபடி:

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவதெக்காலம்.

இப்படியிருக்க இதுகளை எல்லாம் நீங்கள் செய்விக்கிறதினாலே கண்ணுக்கு அலங்காரம் வேடிக்கையே அல்லாமல், அதினால் வேறே ஒரு பலனுமில்லை என்று உங்களுக்குத்தானே தெரியுமே. அதினால் உங்கள் ஆத்துமம் மோட்சத்தை அடைகிறதற்கு இடமுமில்லை. இவ்வுலகத்திலேயும் அதினால் உங்களுக்கு ஒரு இக்கட்டு நீங்குகிறதுமில்லை. நீங்கள் ஒரு பிரயோசனத்தையுங் கண்டு பிடிக்கிறதுமில்லை. இந்த ஆராதனையிலுஞ் சடங்குகளிலும் மெஞ்ஞானமில்லை என்கிறது திருஷ்டாந்தரமாயிருக்கிறது. கொங்கணவர் சொல்லுகிறபடி:

கடவுளோன் ஒருவனுண்டே வேதமொன்றே
காரணசற்குரு தீட்சை ஸ்நானமொன்றே
அடவுடனே அவர் அருளும் பதவி ஒன்றே
அம்புவியின் மனுப்பிறவி ஆனதொன்றே
கடவழியும் பலமனுவோர்க்கொன்றே அல்லால்
நால்வேதம் அறுசமயம் நடக்கை வேறாய்
திடமுடைய தேவர் பலருண்டென்போர்கள்
தீய் நரகுக்காளாவார் திண்ணந்தானே.

கர்த்தரால் அருளிச் செய்யப்பட்ட சத்திய வேதமும் இதைக்குறித்துச் சொல்லுகிறதென்னவென்றால்: மெய்யான பராபரன் உண்டென்கிற அறிவு மனிதருக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; பராபரன் அதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஏனென்றால் அதரிசனமான இலட்சணங்களாகிய அவருடைய நித்திய வல்லமையுந் தேவத்துவமும்

லோக சிருஷ்டிப்பு முதற்கொண்டு செய்கிரியைகளினாலே உணர்ந்து காணப்படுகிறது. ஆகையினாலே அவர்கள் போக்குச் சொல்லிக்கொள்ள இடமில்லாதவர்களாய் இருக்கிறார்கள். அதேனென்றால் அவர்கள் இதுகளைக்கொண்டு பராபரனை அறிகிறதற்கு இடமாயிருந்தும், அவரைப் பராபரனாக மகிமைப்படுத்தவுமில்லை, இஸ்தோத்திரிக்கவுமில்லை. ஆனால் தங்கள் விசாரங்களில் அவத்தராய்ப் போனார்கள். அவர்களுடைய உணர்வற்ற சிந்தை இருண்டுபோயிற்று. தாங்கள் ஞானிகளாயிருக்கிறோமென்று சாதித்தும், பயித்தியக்காரரானார்கள். அழிவில்லாத பராபரனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷன் பறவைகள் நாலுகால்சீவன்கள் ஊர்வனங்களுக்கும் ஒப்பான சுரூபமாக மாற்றினார்கள். இவர்கள் பராபரனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றிப்போட்டு, சிருஷ்டிகரைப் பார்க்கிலும் சிருஷ்டிப்பைச் சேவித்து ஊழியஞ் செய்தார்கள் என்பதாம்.

லோகத்திலே பரம்பிப்போன முன் சொல்லப்பட்ட அக்கியான மயக்கத்தால் துன்மார்க்கங்களுங் கேடுகளும் மிஞ்சிப்போயிற்று. இதுகளென்னவெனில், மனதைப் பிடித்திருக்கும் மிகுதியான மண் பெண் பொன்னாசையும், இம்மூவாசைகளினால் வருகிற பெருமை, அகந்தை, ஆண்மை, காமக்குரோதம், அழுக்கான இச்சைகள், பொருளாசை, பிசினித்தனம், அநீதங்கள், அநியாயங்கள், கோபங்கள், எரிப்பு, வழக்கு, சண்டை, யுத்தம், கலாபம், ஒருவர் ஒருவரைக் கெடுக்கிற துர்க்குணங்கள், கலகங்கள், முதலியவைகளாம். இவைகள் மனிதருக்குள்ளே மிகுதியாய் வழங்குதல்லவோ.

நாவினாலே பிறக்கிற கேடுகள் எத்தனை. பொய், புரட்டு, சூது, திருவாதிரம், தந்திரம், கபடு, உதாசனம், நிந்தை, அசப்பியம், கோள், பின்புறணி, வசவு இது முதலிய இலச்சைகேடான பேச்சுகள் மிச்சம் அல்லவோ.

நடத்தையைப் பார்த்தால், விபசாரம், வேசித்தனம், முறைகேடான பாவம் மற்றுமுண்டான அருவருப்புள்ள அழுக்குகள், சிநேகத்தாட்சி, உடன்படிக்கைபாதகம், எத்துவாதம், துடுக்கு, பிரிவினைகள், முண்டுத்தனம், தெய்வதூஷணம், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதகுணம், சுவாமிதுரோகம், குருதுரோகம், இராசதுரோகம், நன்றிகேடு, கொலைபாதகம், வயிராக்கியம், பழிவாங்குதல், குடிவெறி இது முத

ளான துன்மார்க்கத்தினாலே லோகமெல்லாம் நிறைந்து கெட்டுப்போய்க் கிடக்கிறது அறியப்படும்.

இதெல்லாங் கர்த்தரின் நீதிக்கு ஏற்காதென்றும், அதினாலே அவருடைய கோபாக்கினை வருகிறதென்றும் மனிதர் அறிந்தும், தாங்கள் சொரணையற்றவர்களாய் அதிலேஉழன்று திரிந்து, தங்களைக் கெடுத்துப்போடுகிறதுமல்லாமல், மற்றவர்களையுந் தங்களுடைய துன்மாதிரியினாலே கெடுத்து, மோட்சமென்ன, நரகமென்ன என்று உணர்வற்றவர்களாயிருந்து, மோட்சத்துக்குப் போனாலுஞ் சரி நரகத்துக்குப்போனாலுஞ் சரி என்று நினைத்து, தங்கள் இச்சைகளிலேயும் மாய்கையான சந்தோஷங்களிலேயுந் தங்கள் ஆயுசின் நாளைப் போக்கி, செத்துக்கெட்டுப்போகிறார்கள்.

உ.

பாவகாரணம்.

முன் சொல்லப்பட்ட துன்மார்க்கங்களும் அதினால் உண்டான துக்கமான கேடுகளும்லோகத்திலே எப்படி வந்ததென்று கேட்டால், அது பிசாசினாலும் மனிதரின் குற்றத்தாலும் வந்ததென்று சொல்ல வேண்டுமே ஒழிய, சர்வ நன்மை சுபாவமுள்ள பராபரனாலே வந்ததென்று பரிச்சேதமாகச் சொல்லவே போகாது.

நீங்கள் நினைக்கிறபடி நன்மை தின்மை, பாவம் புண்ணியம், நரகம் மோட்சம் சகலமுங் கர்த்தரால் வருகிறதென்றும், அதுகள் அவருடைய திருவிளையாடல் என்றுங் கலந்து சொல்லுகிறது மகா மோசம். அளவற்ற ஞானம் பரிசுத்தம் நீதி சத்தியம் தயவுள்ள பராபரன் தம்முடைய தேவலட்சணங்களுக்கும் மகிமைக்கும் ஏற்றதுகளைச் செய்கிறதொழிய, அதுக்கேற்காததொன்றைச் செய்யவுங் கற்பிக்கவும் அதுகளுக்குச் சம்மதிக்கவும் மாட்டார். அதுகளை விலக்கி, அருவருத்து, தண்டிக்கிறதொழிய, விளையாட்டுக்காரியமாகப் பாவித்து ஏனோதானோ என்றிருக்க மாட்டார்.

சர்வத்திற்கும் வல்ல கர்த்தர் ஆதியிலே பரலோகத்தையும் பூலோகத்தையும் அதிலுள்ள வஸ்துக்களையுஞ் சர்வஜீவ செந்துக்களையும் பழுதில்லாமல், தமது அளவில்லாத ஞானம் பரிசுத்தம் தயவுக்கு ஏற்றதாக உண்டாக்கினார்.

மனிதருக்குப் பிரயோசனமான பொருட்களையும் உ
காரங்களையும் முந்தி உண்டாக்கி, பகலிலே வெயிலும் வெ
ளிச்சமுங் கொடுக்கிற சூரியனையும், இராக்காலத்திலே நி
லவைக் கொடுக்கிற சந்திரன் நட்சத்திரங்களையும் வானத்
லே வைத்தார். அதுக்கும் பூமிக்கும் நடுவே ஆகாயத்தி
பறக்கிற பல பட்சிசாதிகளையுங் குளிர்ந்த காற்றையும் மழை
பெய்கிற மேகங்களையும் சுவாசத்துக்கேற்ற ஆகாசத்தைய
உண்டாக்கினார். பூமியில் பல மட்சம் நிறைந்த சமுத்திர
த்தையும், குடிக்கிறதற்கும் பயிர்களுக்கும் உதவியான நல்
தண்ணீர் வருகிற ஆறுகளையும், மலை பர்வதங்கள் பள்ள
தாக்குகள் பல மண்ணுள்ள ஒத்த தரைகளையும் மகா ஒழு
காக வைத்தார். அதிலே பல நல்ல கனி கொடுக்கிறதற்கும் வி
களுக்கும் ஏனங்களுக்கும் உதவியான மரங்களையும், நெல்
முதலான நன்செய் புன்செய் நவதானியங்களையும், காய்க
பதார்த்தங்களையும், வஸ்திரங்களுக்கு உதவும் பருத்தி
யும், வியாதிகளுக்கு உதவியாயிருக்கிற மருந்துகளைய
பொன் வெள்ளி இரும்பு செம்பு முதலான பஞ்சலோகங்
களையும், முத்து நவரத்தினங்களையும், பல வகையுள்ள ம
உபகாரங்களையும் திரளாகச் சிருஷ்டித்தருளினார். பின்
யும் மனிதருக்கு உதவியான யானை குதிரை ஒட்டகம் ஆ
மாடு மற்ற மிருகங்களையும் ஊர்வனங்களையும் சகலசீவ செ
துக்களையும் நமக்குப் பிரயோசனமாக உண்டாக்கினார்.

நாம் இதுகளை எல்லாங் கவனித்துப் பார்க்கிறபோ
ஆண்டவரே, உமது கிரியைகள் எத்தனை திரள். தேவ
எல்லாத்தையும் ஞானமாகப் படைத்தீர். பூச்சக்கரமெ
லாம் உம்முடைய நன்மைகளினால் நிறைந்திருக்கிறதென்
அவருக்கு ஸ்தோத்திரமாக நன்றியறிந்து சொல்ல வேண
டும்.

இப்படி மனிதர் தாட்சி குறைச்சல் இல்லாமல் பிழை
கும்படிக்கு, முன் எல்லாத்தையுஞ் சேகரம்பண்ணி வைத்
பின், ஆதிமனிதராகிய ஒரு ஆண்பிள்ளையையும் ஒரு பெ
பிள்ளையையும் உண்டாக்கி, லோகத்திலே இந்த இரண்டு
தியையல்லாமல் வேறே சாதியில்லை என்றும், அவர்களாலே
மனிதசாதி லோகமெங்கும் பரம்பிப்போகவேண்டுமென்று
கற்பித்தார்.

மனிதர்களின் சரீரத்தை மகா ஒழுங்கும் ஞானமுமாக உண்டாக்கி, கண் காது மூக்கு வாய் நாக்கு பல்லு கை விரல் கால் மற்றுமுள்ள நேர்த்தியான அவயவங்களையும் பஞ்சேந்திரியங்களையும் மகா வரிசையாக வைத்தார்.

இந்தச் சரீரத்துக்கு அழியாத வஸ்துவாகிய ஒரு ஆத்துமத்தைக் கொடுத்து, அதுக்கு நல்ல புத்தியையும் மனதையுங் கட்டளைபண்ணி, அதை ஞானம் நீதி பரிசுத்தம் மற்றச் சிலாக்கியங்களினால் அலங்கரித்து, மனிதனை இந்தப்பூமியிலே எசமானாக வைத்து, அதை ஆளவும் அநுபவிக்கவுங் கையளித்து, தம்முடைய பட்சத்தை மிகுதியாய் வெளிப்படுத்தினார்.

ஆனதால் முன்சொன்ன துன்மார்க்கங்களும் கேடுகளும் அப்போது பரிச்சேதமாக லோகத்திலே இருந்ததில்லை. அவர்கள் தாட்சி குறைச்சலில்லாமல் சந்தோஷமாய் வாழவும், தங்கள் சிஷ்டிகரை அறிகிற அறிவிலே தேறவும், ஞானம் பரிசுத்தம் நீதி புண்ணியங்களிலே வர்த்தித்துப்போகவும், சகல வித பாக்கியங்களை அநுபவிக்கவும், பராபரன் அவர்களைச் சிங்காரவனத்திலே வைத்து, நல்ல பிதாவாகப் பராமரித்தார்

இதற்கு எத்தனமாக அவர் தம்முடைய பரிசுத்த சித்தத்தையுங் கட்டளைகளையும், அவர்கள் விலக்க வேண்டிய தீமை ஏதென்றும் செய்யவேண்டிய நன்மை ஏதென்றுந் தெளிவாய் வெளிப்படுத்தினார். இப்படி அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சிலாக்கியங்களை நன்றாய்க் காத்து, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, நன்மையிலும் புண்ணியங்களிலும் உண்மையாக நிலைத்திருந்தால், அவர்கள் அதிகமான மகிமைக்குப் பாத்திரமாகி, அவர்கள் நோக்காடு வியாதி மரணம் மற்ற இக்கட்டில்லாமல் மோட்சஞ் சேர இடமாயிருந்தது.

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல், பிசாசின் தந்திரங்களாலுந் தங்கள் சுய குற்றத்தாலும் பாவத்தில் விழுந்துகெட்டுப்போனது மகா துக்கம்.

அது எப்படி சம்பவித்ததென்றால், பராபரன் மோட்சத்திலே தம்மை வணங்கவும் மகிமைப்படுத்தவும் மகா ஞானமும் பரிசுத்தமும் வல்லமையுமுள்ள சம்மனசுக்களாகிய தேவ தூதர்களையுங்கூட ஏராளமாக உண்டாக்கினார். அவர்

களில் சிலர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மகிமை சிலாக்கியம் போதாதென்று எண்ணி, பராபரனுக்கு விரோதமாய் எழும்பி. அவரைப் போல் தங்களைத்தானே தெய்வமாக்க வேண்டும் என்று பெருமை அடைந்தார்கள்.

இந்த ஆகாத நினைவு பராபரனாலே வரவில்லை. அவர் பொல்லாப்பு தீமையில்லாமல் புத்தியுள்ள வஸ்துக்களை உண்டாக்கினார். அவர்கள் அழுக்குப்படாமலும் பொல்லாப்பைச் செய்யாமலும் நடந்து, சுயமனதின் உற்சாகத்தாலே தீமையை விலக்கவும் நன்மையைச் செய்யவுங் கற்பித்தார்.

அந்தப் பெருமையான நினைவு அவர்கள் சொந்தக் குற்றத்தினாலே வந்தது. அவர்கள் இப்படி பராபரனுக்கு விரோதிகளானபடியினால், பராபரன் அவர்களை மோட்சத்துக்குப் புறம்பாக்கி, நரகத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தள்ளிப்போட்டார். இப்படி இவர்கள் பேய் பிசாசுக்களுந் துன்மனசுகளுமாய்ப் போனார்கள். அவர்களுடைய சுபாவக்குணமெல்லாம் முழுவதுங் கெட்டுப்போச்சுது.

அதுகளில் அதிகத் துர்க்குணமான சாத்தானென்ற பிசாசு மனிதருக்குண்டாயிருந்த பாக்கியத்தைப் பொறுக்கமாட்டாமல், எரிப்பாய்ப் பார்த்து, தான் கெட்டுப்போனபடி அவர்களுங் கெட்டுப்போகவேண்டுமென்று பொல்லாத யோசனைபண்ணி, பராபரனுடைய கற்பனையை அவர்கள் மீறவும், ஆண்டவர் தங்களுச்குக் கொடுத்த பாக்கியம் போதாதென்று நினைக்கவும், தாங்களும் அவரைப்போல் ஆகவேண்டுமென்கிற பெருமை அவர்களிலும் உண்டாகவும், அவர்களை ஏய்த்துப்போட்டது. அவர்களும் எச்சரிக்கையாயிராமல், இந்தத் தந்திரத்துக்குத் தங்களை மனதார ஒப்புக்கொடுத்தபடியால், பாவத்திலுங் கேட்டிலும் அகப்பட்டுப்போனார்கள்.

இப்படி முன் சொல்லப்பட்ட துன்மார்க்கங்களுங் கேடுகளும் அன்றுதொட்டு லோகத்தில் உண்டாகி, வரவாப்பரம்பி, இப்போது லோகத்திலே எங்கும் மிஞ்சிப்போச்சுது என்று காண்கிறோம். ஆகையால் தெய்வவசனஞ் சொல்லுகிறபடி பிசாசினாலும் ஆதி மனிதனாலும் பாவஞ் சாவு என்கிறதிலே அடங்கின சகல கேடுகளும் லோகத்திலே வந்ததென்று நாமுஞ் சொல்ல வேண்டியது.

௩.

பாவவிமோசனர்.

நம்முடைய சீர்கிர்வாகம் இப்படி பாதாபமாய்க் கிடக்
கிறதென்று நாம் எல்லாரும் அறிந்து ஒத்துக்கொள்ள வேண்
டியது. அது ஆதியிலே எப்படி வந்ததென்று வெகு விஸ்தா
ரமாய் விசாரித்துப் பார்க்கிறதை விட, ஒருவியாதிக்காரன்
தன் வியாதி வந்த முகாந்திரங்களை அதிகமாய் விசாரித்துக்
கொண்டிராமல் தன் வியாதி தீருகிறதற்கு ஏற்ற அவிழ்தத்
தைத் தேடுகிறதுபோல், நாம் அகப்பட்டுக் கிடக்கிற கேடு எப்
படி நீங்குமென்று கவலைப்படுகிறதே உத்தமம்.

நீங்களும் பாவந்தீர்ந்தாலொழிய, ஈடேற்றமில்லையென்று
அறிவீர்களே. அது தீரப் பல உபாயங்களைத் தேடுகிறீர்கள்.
நீங்கள் அதற்காகச் சிவன் விஷ்ணு பிரமா பிள்ளையார் சுப்
பிரமணியன் பார்வதி சரஸ்வதி இலட்சுமி முதலியவர்களையும்
பற்றிப்பிடித்து வணங்குகிறீர்கள். இதினால் பாவம் போகுமா.

இன்னம் துஷ்டதேவதைகளாகிய ஐயனார் பிடாரி மாரி
யம்மன் அங்காளம்மை துர்க்கை காளி இது முதலானதுக
ளுக்கு ஆடு பன்றி கோழி அடித்து, பொங்கல் இட்டு, பலவித
பணிவிடை செய்கிறதினாலே உங்களுடைய பாவம் போகுமா.

மேலும் நீங்கள் இந்தத் தேவதைகளுக்குத் தேர் திரு
விழா கண்ணுக்கு அலங்காரமான வேடிக்கை, பாவத்துக்கு
அடையாள்மான ஆசையிச்சையின் விளையாட்டுகளைச் செய்
வதால் அதிகப்பாவம் வருகிறதேயல்லாமல், உங்கள் ஆத்து
மத்துக்கு ஒரு பலனும் வரப்போகிறதில்லை, பாவந்தீரப்
போகிறதுமில்லை.

இதல்லாமல் லோகத்திலே உங்கள் பெரியோர்கள்
உரைப்படி வேடம் ருத்திராட்சந் தரிப்பதினால் பிறவி அற்
றுப்போமென்றும், தலை சிறைப்பதினாலுந் தாடி சடை
வளர்ப்பதினாலும் பாவம்போமென்றும், பலசாஸ்திரங்கள்
கற்பதினால் தவசிலை உண்டாகும் என்றும், உடல் ஒறுப்
பதினால் மரணம் போகுமென்றும் நம்பி, மகாமக இஸ்நா
னம் சேதுஇஸ்நானம் கங்காஇஸ்நானம் என்கிற இப்படிப்
பட்ட வீணான பல தீர்த்தங்களில் முழுகி, பலவிதத்திலேயும்
மயங்கித் திரிவதினால் உங்களுடைய பாவ அழுக்கு அறுமா.
அறவே மாட்டாது. இது மெய்யோ பொய்யோ என்று உங்
கள் புராணங்களினால் கண்டு கொள்ளலாம்.

அல்லது உங்கள் பாவம் நீங்கள் ஆராதிக்கி[illegible] தேவதைகளால் தீருமென்று நம்பக் கூடுகிறதெப்படி. அவர்கள்தானும் பிறந்து வளர்ந்து சிற்றின்பக்கலவியில் அகப்பட்டு, பாவையர்களுக்குத் தூது நடந்து, அறுபத்து நாலு திருவிளையாட்டு நடப்பித்து, பத்து அவதாரம் எடுத்து, வஞ்சனையால் கொன்று, பெண்களைச் சிறை எடுத்தவர்களாச்சே, இப்படிப்பட்டவர்களாலே பாவம் அறுமா. நீங்கள் சத்திரஞ் சாவடி கோவில் கோபுரம் தேர் தெருவீதி இதுகளில் பல சித்திரங்களாய்ச் செய்வித்திருக்கிறபடியே பலவித அக்கிரம லீலைகளையும் மற்ற இகழ்ச்சியான சங்கதிகளையும் நடப்பித்த தேவர்கள் உங்கள் அக்கிரமங்களையும் பாவங்களையுந் தீர்ப்பார்களென்று நீங்கள் நம்புகிறது கனமோசம். அவர்கள் தானும் பரிசுத்தமும் நீதியுமுள்ள கர்த்தருக்குத் தாங்கள் செய்த பாவத்துக்காகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதாயிருக்கக் கொள்ள, உங்கள் பாவங்களை நிவாரணம்பண்ணக் கூடுவதெப்படி.

ஆகிலும் நாங்கள் கண்டறிகிறதென்னவென்றால், காரணகுருவாக இருந்து பாவத்தையும் புண்ணியத்தையும் அறியக் கொடாமலும், வேதம் சாஸ்திரம் முதலிய சகலத்தையும் போதிவியாமலுமிருக்கிறது இந்தத்தேசத்திலே மிச்சம். ஆனால் தங்கள் சுய பிரயோசனங்களை நாடி மிச்சமாய் ஏற்பட்டிருக்கிற காரியக்குருக்கள் நல்ல அறிவை அறிகிற வழியைக் காண்பியாமல், தங்கள் மனதுக்குத் தோன்றினபடி எல்லாம் பயிற்றுவித்து மயக்குவிக்கிறார்கள். அந்த மயக்கத்தினால் லோகம் நிறைந்திருக்கிறது.

காரியம் இப்படியிருக்கக்கொள்ள, பராபரனையல்லாமல் பாவந் தீர்ந்து கரையேறுகிறவழியை ஒரு மனிதனுந் தன் சுய புத்தியினால் கண்டுபிடிக்கக் கூடாது. இது நிமித்தமாகப் பராபரன் நமதுபேரில் இரங்கி, மனிதர்களிடத்திலிருக்கிற கலக்கத்தை நீக்கி, அந்த வழியைத் தம்முடைய சத்திய வேதத்தைக் கொண்டு வெளிப்படுத்தினார்.

இந்தச் சத்தியவேதத்தைப் பரிசுத்த மனிதர் உங்களுடைய முன்னோர்களைப்போலே தங்கள் சுயபுத்தியினாலும் படிப்பினாலும் உண்டாக்காமலும், ஒருவரும் வாசித்தறியக் கூடாத பாட்டுகளைக்கொண்டு மறைபொருளாகச் சொல்லாமலும், பராபரன் அவர்களுக்குக் கட்டளைபண்ணின மெஞ்ஞானத்தைக்கொண்டு எல்லாரும் வாசித்தறியும்படிக்கு ம

தெளிவாய் எழுதினார்கள். சத்தியவேதம் உங்களுடைய வேதப்பிரமாணத்தைப்போல் மறைபொருளாயிராமல், வெளிச்சமும் வெளிப்பொருளும் யாவருக்கும் பிரயோசனமும் நம்முடைய ஈடேற்றத்தைக் காண்பிக்கும் உத்தம வழியுமாயிருக்கிறது.

அதின் பொருள் என்னவென்றால்: ஒரே பராபரனும் பராபரனுக்கும் மனிதருக்கும் ஒரே மத்தியஸ்தருமுண்டு. இவர் மனித அவதாரம் எடுத்த கிறிஸ்து இயேசுதானே. இவரால் பாவந் தீருமே ஒழிய மற்ற ஒருவராலுந் தீராது. இவரால் இரட்சிக்கப்பட்டுக் கரையேறுகிறதே ஒழிய மற்றப்படி அல்ல. ஏனெனில் அவர் பராபரனாலேயே நமக்கு இரட்சகராக அனுப்பப்பட்டவர். கிறிஸ்துநாதர் நம்மை இரட்சிக்கத் திராணியுஞ் சமர்த்துமுள்ளவர். அவர் எல்லா மனிதருக்கும் அதிகப்பட்டவர். அவர் அநாதியாய்த் தேவ மகிமையுள்ளவர். சர்வலோகமும் அவரால் உண்டாயிற்று. அவரை அறிந்து அங்கிகரித்து, அவர் பேரில் பத்தி விசுவாசமாயிருக்கிறவர்கள் கெட்டுப்போகாமல், மோட்சத்தை அடைவது பராபரனுடைய கிருபையுள்ள சித்தம்.

அவர் உங்கள் தேவர்களைப்போல் பிறவாமல், பரம இரகசியமாகப் பராபரனிடத்தில் அநாதியாய்ப் பிறந்த பராபரனுடைய ஒன்றான குமாரன். அவருடைய தேவ பிறப்பைப் போலவே அவருடைய மனித பிறப்பும் பரம இரகசியம். அது எப்படியென்றால்:

க) அவருடைய பிறப்பு காலாகாலங்களுக்கு முன்னே பரிசுத்த மனிதர்களாகிய தீர்க்கதரிசிகளால் தேவேத்தனமாய் அறிவிக்கப்பட்டது. அவர் பிறக்கப்போகிற கோத்திரமும் வங்கிஷமும் ஊரும் மாதாவும் காலமும் அவர் நடப்பிக்கப்போகிற கிரியைகளும் எல்லாம் முன்னற அறிவிக்கப்பட்டபடி சரியாய் நிறைவேறிற்று.

உ) அவர் புருஷன் உதவியில்லாமல் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தெய்வபத்தியுள்ள ஒரு கன்னியாஸ்திரியினிடத்தில் பாவமில்லாமல் பரிசுத்தமாய்ப் பிறந்தார். மாய்கையுள்ள மனிதர்கள் ஆசிக்கிறபடி அவர் லோக ஆடம்பரமாய்ப் பிறவாமல், நாம் ஆத்தும ஐசுவரியமாகிய ஞானம் நீதி பரிசுத்தம் மெய்ப்பாக்கியத்தைப் பெறும்படியாக அவர் தரித்திரமாய்ப் பிறந்தார்.

தரித்திரமாய்ப் பிறந்திருந்தாலும், அவர் பிறந்த இராத்திரியிலே பரம சம்மனசுக்கள் அவருக்குக் காத்திருந்த தெய்வபத்தியுள்ள மனிதர்கள் அண்டையிலே வந்து: பயப்படாதேயுங்கள், சந்தோஷப்படுங்கள், இன்று உங்களுக்கு இரட்சகர் பிறந்தார் என்று அவர்களுக்கு அறிவித்து, பிற்பாடு பராபரனை மகிமைப்படுத்தி, லோக இரட்சகரை அனுப்பின உன்னத பராபரனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனிதர் பேரிலே பிரியமுமுண்டாவதாக என்று பாடி, பரமண்டலத்திற்கு ஏறிப்போய்விட்டார்கள்.

பிறகு அவர் வயதிலே வளர்ந்தார். அவருடைய ஆத்துமத்தில் உண்டாயிருந்த மகா பெரிய ஞானமும் பரிசுத்த குணங்களும் அநேகஞ் சமயங்களிலே வெளியரங்கமாச்சுது.

முப்பதாம் வயதிலே அவர் ஒரு பெரிய குருவினிடத்திலே ஞானஸ்நானம் பெற்றபோது அவருக்கு மேலாக வானந் திறக்கப்பட்டது. அவர் பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதங்களினாலே நிறையப்பட்டார். இவரே நம்முடைய நேசகுமாரனென்ற பரம பிதாவின் சத்தங் கேட்கப்பட்டது. இப்படி அவர் லோக இரட்சகராகத் திடப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டார். அன்று தொட்டு அவர் தம்முடைய சுகிர்தமான உபதேசத்தைச் சொல்லி, பாவந்தீர்ந்து இரட்சிக்கப்பட்டுக் கரையேறும் வழி என்னவென்று பிரசங்கிம்பண்ணி, சுவிசேஷம் என்று சொல்லப்பட்ட அவருடைய உபதேசம் லோகத்திலே விளங்கும்படியாக, தமது பன்னிரண்டு சீஷர்களைப் போதகராக வைத்தார்.

மனந்திரும்புங்கள்; உங்கள் பாவங்களை அறிந்து மனஸ்தாபப்பட்டு, மாமிச இச்சைகளையும் லோக இச்சைகளையும் வெறுத்து, நம்மிடத்திலே வந்து, நம்முடைய பரிசுத்த மாதிரியைப் பின்பற்றுங்கள். நாமே உங்களை முசிப்பாற்றி, உங்களுக்கு ஆத்தும இளைப்பாறுதலையுந் தருவோம். ஒருவன் லோகத்தை எல்லாம் ஆதாயமாக்கிக்கொண்டும், தன் ஆத்துமத்தை இழந்தால், அவனுக்கு லாபம் என்ன. உங்கள் ஆத்துமம் நம்மிடத்திலே பிழைக்கும். நாம் உங்களுக்கு நித்திய சீவனையும் மோட்சபாக்கியத்தையுந் தருவோம். நம்முடைய பேரில் விசுவாசமாயிருக்கிறவன் செத்தாலும் பிழைப்பா

னென்று சொல்லி, மகா பெலனும் இன்பமுமாய்ப் பிரசங்கம் பண்ணினார்.

இதல்லாமல் மனிதர்களுக்கு உபகாரமாயிருந்த அதிசய மான கிரியைகளைச் செய்து, வியாதிக்காரரைக்குணமாக்கி, சப்பாணிகளை நடக்கவும், செவிடரைக் கேட்கவும், ஊமைய ரைப் பேசவும்பண்ணி, செத்தவர்களை எழுப்பி, மனிதருக் குள் ஒருத்தனும் ஒருக்காலுஞ் செய்யாததுஞ் செய்யக்கூடா ததுமான புதுமைகளைச் செய்து, தம்முடைய தெய்வவல்ல மையைக் காட்டியருளினார்.

தங்கள் பாவந் தீர வேண்டுமென்று அங்கலாய்த்து, பொய்வாழ்வைத் தள்ளி, மெய்வாழ்வு வேண்டுமென்று ஆசை யாயிருந்து, அவருடைய உபதேசத்தை மெத்த விருப்பமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அவராலே மெத்த தயவாய்ச் சேர்த் துக்கொள்ளப்பட்டார்கள். தங்கள் பாவக்கேட்டின் நிமித் தந் துக்கப்பட்டவர்கள் அவராலே தேற்றப்பட்டு, பாவமன் னிப்பைப் பெற்று, மனக்கலக்கந் தீர்ந்து, இரம்மியமான ஆறுதலையும் மன அமைச்சலையும் ஞானசந்தோஷத்தையும் மோட்ச நம்பிக்கையையும் பெற்று அநுபவித்தார்கள்.

ஆனால் இந்த மெய்வாழ்வை எண்ணாமல், மாமிச இச் சையையும் லோக மாய்கையையும் பெருமையையும் அதிகப் பிரியமாய் நாடினவர்கள் அவருடைய உபதேசத்தை அற்ப மாக எண்ணி, பெரியோர்களுக்குள்ளே விசேஷமாகச் சில நல்லவர்கள் தவிர வெகுபேர்கள் அவருக்குப் பிராண சத்து ராதிகளாயிருந்தார்கள். அவரிடத்திலே ஒரு குற்றத்தைக் கண்டு பிடித்துக் கொன்றுபோட வேண்டுமென்று இவர்கள் மெத்த பிரயாசப்பட்டாலும், அவர் அற்ப அழுக்கில்லாத வராய் நடந்தபடியினாலே, அவருடைய பேச்சிலும் நடக்கை யிலும் ஒரு அற்பகுற்றத்தை முதலாய்க் காணாமல் வெட்கப் பட்டுப்போனார்கள்.

ஆனால் அவர் மனிதருடைய பாவக்குற்றங்களை நிவர்த்தி யாக்க வேண்டுமென்று இந்த லோகத்தில் வந்தபடியினா லே, அவர் பிணையாளியும் உத்தரவாதியுமாகப் பாவிகளுக்கு வரவேண்டிய ஆக்கினைகளைத் தம்முடைய மேல் ஏற்றுக் கொண்டு உத்தரிப்பதற்கு மன உற்சாகமுள்ளவராய் இருந் தார்.

ஏனெனில் நீதியும் பரிசுத்தமுமுள்ள கர்த்தர் தம்மு டைய கற்பனைகளை மீறி நடக்கிறவர்கள் சாபத்துக்கும் ஆக் கினைக்கும் உளராயிருக்க வேண்டுமென்று தம்முடைய வச னத்தில் திருவுளம்பற்றினபடியினாலே, ஒன்றில் பாவிகள் தானே என்றைக்கும் அதை உத்தரிக்க வேண்டும், ஒன்றில் அதுக்குப் போதுமான உத்தரவாதி அதை உத்தரிக்க வேண் டும்; மற்றப்படி பராபரனுடைய வசனம் மெய்யென்று விளங்காது. அவர் பராபரனுடைய ஒன்றான குமாரனும் தேவமகத்துவமுள்ளவருமாயிருந்து, பராபரனுடைய கற்ப னைகளைக் குறைவற்ற பிரகாரமாய்ப் பரிசுத்த நடக்கையி னால் நிறைவேற்றினபடியினாலே, அவரையல்லாமல் வேறொ ருவரும் இந்த உத்தரவாத கிரியையைச் செய்யக்கூடாதிருந் தது.

அவர் மகத்துவமான இந்த இரட்சிப்பின் கிரியையை உற்சாகமாகப் பிதாவினிடத்திலே ஒப்புக்கொண்டு, கெட்டுப் போன பாவிகளை இரட்சித்துக் கரையேற்ற வேண்டுமென்று மெத்த ஆசையாயிருந்து லோகத்திலே வந்தபடியினாலே, அவர் மனப்பூர்வமாய்ச் சகல துன்பங்களுக்குந் தம்மை ஒப் புக்கொடுத்து, குற்றமில்லாமல் தம்முடைய சத்துராதிக ளாலே பிடிக்கப்பட்டு, மெத்த அநீதமாய் நடத்தப்பட்டு, சிலுவைமரத்தில் முதலாய் அறையப்பட்டு, மரணமடைந்து, தம்முடைய சீவனை நம்மை மீட்கும் பொருளாகக் கொடுத் தருளினார்.

இதினாலே நம்முடைய பாவங்களை எல்லாந் தீர்த்து, பரி சுத்தமும் நீதியுமுள்ள பராபரனோடே நம்மை ஒப்பரவாக்கி, அவருக்குச் சந்தோஷமும் ஸ்தோத்திரமுமாக இந்த இரட் சிப்பின் கிரியையை முற்று முடிய நிறைவேற்றி, குணப்படு கிற பாவிகளுக்குப் பாவமன்னிப்பும் மோட்சமுங் கிடைக்க இடம் பண்ணினார்.

ஆகையினால் அவர் முன்னே பிதாவிடத்தில் இருந்த மகி மையிலே உட்பட மூன்றும் நாளிலே மகா மகிமையோடே தேவ தூதாக்கள் கூடஇருக்க உயிரோடெழுந்தருளி, தம்மு டைய சிஷர்களுக்குத் தம்மைச் சீவனோடே வெளிப்படுத்தி, அவர்கள் தம்முடைய சுவிசேஷமென்கிற உபதேசத்தைச் சகல சாதியாருக்கும் அறிவித்து, அதை ஏற்றுக்கொள்ளுகிற வர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, இப்படி கிறிஸ்தமான சபையிலே சேர்த்துக்கொண்டு, இந்தவழியாக் எல்லாச்ச

னங்களும் இரட்சிக்கப்பட்டுக் கரையேறுகிறதற்குப் பராமரிக்கையாயிருந்தார்.

இந்தப் பெரிய கிரியையைச செய்ய அவாகளுக்குத் தேவையான அறிவு பெலன் தைரியம் சமர்த்து உண்டாகும்படிக்கு, அவர் பரிசுத்த ஆவியை அவர்களுக்கு அனுப்பி, அவருடைய வரப்பிரசாதங்களினுலே அவர்களை நிரப்பி, சமர்த்தராக்குவோமென்று வார்த்தைப்பாடு கொடுத்து, அவர்களும் மற்றப் பத்தியுள்ள அநேகருங்கூட இருந்து காண மகா மகிமையோடே பரமண்டலத்திற்கேறி, இப்போது நமக்கு இரட்சகரும் இராசாவும் நியாயாதிபதியுமாக எங்கும் நிறைந்தவராயிருக்கிருர். வானத்திலும் பூமியிலுஞ் சகல வல்லமையும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய இரட்சிப்பு அவர் கையிலே உண்டு. அதை வேண்டுமென்று ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் சர்வசங்கார நாளில் மோட்சத்தில் அவராலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைந்தன பலனையும் மகிமையையும் பெறுவார்கள். ஆனுல் அவர் கை நீட்டிக் கொடுக்கிற இரட்சிப்பை அசட்டைபண்ணி, தங்கள் பாவங்களிலே சாகிறவர்கள் அதற்காக நரகத்திலே என்றென்றைக்கும் ஆக்கினையை உத்தரிக்க அவராலே தள்ளுண்டுபோவார்கள்.

அவர் பரமண்டலத்திற்கேறின பத்தாம் நாளிலே அவருடைய சீஷப்பிள்ளைகள் கூடி, செபம்பண்ணி, அவர் கட்டளைபண்ணினபடியே பரிசுத்த ஆவியின் வருகைக்குக் காத்துக்கொண்டிருந்த வேளையில் அவர்கள் அதிசயமான பிரகாரமாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு, ஞானவெளிச்சம் பெலன் தைரியம் மற்ற மேன்மையான வரங்களினுல் நிறையப்பட்டு, படித்திராத மறுபாஷைகளைப் பேசுகிறதற்கான சமர்த்தையும் அடைந்தார்கள்.

அவர்கள் உடனே பராபரன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நடப்பித்த மகத்துவங்களை தாங்கள் இருந்த பட்டணத்திலே கூடியிருந்த சாதிகளுக்கு அவரவர்களுடைய பாஷைகளிலே அறிவித்துப் பிரசங்கம்பண்ணின்போது, அநேகம் பேர் அதினுல் எழுப்பப்பட்டு, அதே சத்தியம், அதே இரட்சிக்கப்பட்டுக் கரையேறும் வழி என்று உணர்ந்தறிந்து: குருமாரே, நாங்கள் இரட்சிக்கப்பட்டுக் கரையேற என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அவர்கள்: உங்கள் பாவங்களை உணர்ந்தறிந்து மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவுக்குள்ளே பாவமன்னிப்பையும் இரட்சிப்பையுந் தேடி,

அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெறுங்களென்று சொன்னபோது, ௩௲ பேர் குணப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்தமான சபையிலே சேர்ந்து, கிறிஸ்தவர்களானார்கள்.

அப்போஸ்தலமார் என்ற அந்தச் சீஷாக்கள் அன்று தொட்டு மகா தைரியத்துடனே கிறிஸ்துவின் உபதேசமாகிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே வெகு புதுமைகளைச் செய்தபடியால், மறுபடியும் ௫௲ பேர் குணப்பட்டு, கிறிஸ்தமான சபையிலே சேர்க்கப்பட்டார்கள். இப்படி கிறிஸ்தமான சபை எங்கும் மென்மேலும் பரம்பிப்போச்சுது. இராயரும் இராசாக்களும் பிரபுக்களும் முழு இராச்சியங்களுங்கூட இந்தச் சுகிர்தமான உபதேசத்தை மெய்யென்று நம்பி, ஏற்றுக்கொண்டார்கள். இப்படியாகக் கிறிஸ்துமார்க்கம் லோகத்தின் நாலுதிக்குகளிலும் இற்றையில் வரைக்கும் பரம்பிவருகிறது.

௪.

ஆத்துமக் கவலை.

மெய்ப்பத்தியுள்ள கிறிஸ்தவர்கள் தாங்கள் ஞானஸ்நானத்தினாலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலும் பெற்று ருசித்து அநுபவிக்கிற சுகிர்தமான பாக்கியங்களை மற்றவர்களுக்கு அறிவிக்கவும், ருசிக்கக் கொடுக்கவும், எல்லாருங் கிறிஸ்து இயேசுவை அறிந்து இரட்சிக்கப்பட்டுக் கரையேறவும் வேண்டுமென்று மெத்த ஆசையாயிருப்பார்கள்.

இது முகாந்தரமாகத் தென்மார்க்கு அலமன்னியா இங்கிலாந்து முதலான தேசங்களிலிருக்கிற விசேஷித்த பத்தியுள்ள கிறிஸ்தவர்கள் இத்தேசத்திலும் மற்றத் தேசங்களிலுமுள்ள யாவரும் இந்தப் பெரிய பாக்கியத்துக்குப் பங்குள்ளவர்களாய்ப் போக வேண்டுமென்று தங்கள் பத்தியினாலே எழுப்பப்பட்டு, பத்தியுள்ள குருமார்களை அங்கங்கே அனுப்பி, இந்தச் சுவிசேஷ பிரபலியக் கிரியைக்கு உதவிசெய்து வருகிறார்கள்.

அனுப்பப்பட்ட குருமார்களாகிய எங்களுக்குள்ளேயும் அப்படிப்பட்ட ஆசை உண்டாயிருக்கிறபடியினாலே, மன உற்சாகமாக நாங்கள் பிறந்த தேசத்தையுந் தாய் தகப்பன்மார்களையும் பெந்து சனங்களையும் பிரயோசனங்களையும்

விட்டு உங்களண்டையிலே வந்து, இந்த அமிர்தமான உபதேசத்தை அறிவிக்கிறோம். உங்கள் குருக்களைப் போலே நாங்கள் உங்களிடத்திலே தற்பொழிவைத் தேடாமல், உங்கள் ஆத்தும நன்மையை நாடித்தேடி, நீங்கள் எங்களோடே கூட கிறிஸ்துவினாலே இரட்சிக்கப்படவேண்டுமென்று மெத்த பட்சமாய் உங்களை எச்சரிக்கிறோம்.

அன்றைக்குக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே மனதிலே எழுப்பப்பட்டு: குருமாரே, நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்வோமென்று கேட்டதுபோல், நீங்களும் எழுப்பப்பட்டு ஆசையாய்க் கேட்டால், உங்களுக்கு நலமும் எங்களுக்குச் சந்தோஷமுமாயிருக்கும். அப்போது நீங்கள் கிறிஸ்து இயேசுநாதரிடத்திலே உண்டான மிகுந்த பலனையும் சிலாக்கியங்களையும் எங்களோடேகூடப் பெற்றநுபவித்துக் கொள்ளுகிறதற்கு நாங்கள் மன உற்சாகமாய் உங்களுக்கு வழிகாட்டுகிறதுமல்லாமல், நாங்கள் உங்களுக்கு அறிவிக்கிற இந்தச் சுவிசேஷமும் உங்கள் மனதிலே பட்டுப் பெலன் செய்யும் என்று நிச்சயித்துமிருக்கிறோம்.

ஆனால் நீங்கள் உங்கள் சரீர பிரயோசனங்களை மாத்திரந் தேடி, என்னத்தை உண்போம் என்னத்தை உடுப்போம் எவ்விடத்தில் குடியிருப்போமென்கிற துக்கக் கவலையொழிய வேறொருகவலையுமில்லாமல்: மோட்சத்தைக் கண்டதார், நரகத்தைக் கண்டதார், நெருப்பென்றுப்போலே வாய் வெகுமா, எங்கள் முன்னோர் போனவழி நாங்களும் போகிறோம், இந்தப் புது வேதம் எங்களுக்கு என்னத்துக்கு என்று மேலே மூச்சியாய் அலைந்துதிரிந்து, உணர்வில்லாமல் நாள் போக்கினால், நாங்கள் வாய் விசேஷமாகவும் புஸ்தகங்களைக்கொண்டும் உங்களுக்குப் புத்திசொல்லிப் பிரயாசப்படுகிறது வீணாய்ப் போம். இப்படி நாங்கள் உங்கள் நன்மையைத் தேடுகிற எங்கள் பட்சத்தையும் உங்களுக்குக் கை நீட்டிக் கொடுக்கப்படுகிற இயேசுகிறிஸ்துவினுடைய இரட்சிப்பையும் மெய்வாழ்வையும் மோட்சத்தையும் வேண்டாமென்று தள்ளிப்போட்டால், நீங்கள் தானே கடைசியில் மனஸ்தாபப்பட்டு அழுவீர்கள். இயேசு கிறிஸ்து சுவிசேஷத்திலே சொன்ன ஒரு ஐசுவரியவானுக்குச் சம்பவித்ததுபோலே உங்களுக்கும் பின்னாலே சம்பவிக்கும், அதெப்படியென்றால்:

ஒரு ஐசுவரியவரன் இந்த லோகத்திலே உண்கிறதி
யும், உடுக்கிறதிலேயுந் தாழ்ச்சியில்லாமல் அனுதினமு
மகிழ்ச்சியுஞ் சம்பிரமமுமாய் வாழ்ந்துகொண்டிருந்தா
மோட்சம் ஏது, நரகம் ஏது, வேதம் ஏது, சுவாமி ஏது, ஆத்
மம் ஏது என்று நிர்விசாரமாய் நாள் போக்கினான். அவ
வாசற்படியிலே ஒரு ஏழை வியாதிக்காரன் பருக்களா
நிறைந்து அகதியாய்க் கிடந்தான். ஐசுவரியவான் அவனை
கண்டு அவன் கிடந்தவாக்கிலே கிடக்கட்டுமென்று அவனை
பராமரிக்காமல் போனான். நாய்கள் சில வேளையிலே வந்
அவன் பருக்களை நக்கிற்று.

இப்படி அவன் சீர்கிருவாகம் பரதாபமாய்க் கண்ட
னும், அவன் தன் ஆத்துமத்திலே ஆண்டவர்மேல் பத்திய
யிருந்து, என்னை ஆற்றித்தேற்றுவார் மனிதருக்குள்ளே இ
லை, கர்த்தர் இருக்கிறார். என் உபத்திரவம் என்றைக்கு
இராது. என் பாவக்கேடு தீர்ந்து மோட்சம் மாத்திரம் கிடை
தால் போதும் என்று சொல்லி, பராபரனை எந்நேரமு
நினைத்துச் செபம்பண்ணி, அவருக்குள்ளே ஆறுதலைப்பெற்ற
தன் உபத்திரவத்தை முறுமுறுக்காமல் பொறுமையோடே
சகித்து, நல்ல மரணத்துக்குக் காத்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கு மரணம் வந்தபோது, என் நல்ல ஆண்ட
ரண்டையில் போகிறேனென்று நம்பி, காலம் பண்ணினான்
அப்போது தேவதூதர்கள் அவன் ஆத்துமத்தைத் மோட்ச
திலே கொண்டுபோய், ஒரு மோட்சவாசியினிடத்திலே வை
திருக்க, அவன் விசேஷித்த மகிமையையுஞ் சங்கையையு
பெற்றுக் கொண்டான்.

ஆனால் உல்லாசமும் சம்பிரமமுமாய்ச் சீவனம் பண்
ணின ஐசுவரியவானுஞ் செத்து, நரகத்திலே போனான். மு
விழிக்க மாட்டாதவன் இப்போது உபாதையிலே கிட
விழித்தான். நரகம் ஏது என்று முன் நினைத்தவன் நரகத்தி
தானே இருந்து, நரகவேதனை எம்மாத்திரமென்று பட்டு
தரித்தான். முன் அவனுக்குண்டாயிருந்த சங்கை ஐசுவரிய
வாழ்வு எல்லாம் போச்சுது. முன் நகைப்போடே வாழ்
வன் இப்போது அழுகையோடே கஸ்திப்பட்டான். அவ
பண்ணின அநீதத்துக்கும் பொய் புரட்டு பெருமை திருவ
திரத்துக்கும் மண் பெண் பொன்னாசைகளுக்கும் ஏற்ற ஆ
கினை வந்தது.

அவன் இப்படி மிருந்த கஸ்தியோடே கிடந்தபோது தெர்லேனூரத்திலே இருந்த மோட்சத்தில் பெரிய மோட்ச வாசியையும் அவர் வசத்திலே இருந்த முந்தின தரித்திரவானையுங் காண்கிறதற்கு இடமாச்சுது. அவன் தரித்திரவானிடத்திலே உபகாரங்களைக் கேட்கத் துணியாமலும், பராபரனிடத்திலேயும் இரக்கந் தேட மனதில்லாமலும் இருந்து, அந்தப் பரிசுத்தவானைப் பார்த்து: அப்பாரே, முன் என்வாசற்படியிலே தரித்திரவானுகக் கிடந்து இப்போது வாழ்கிற அந்தப்பாக்கியவான் தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ண அவரை அனுப்புமென்று விம்மி அலறிக்கெஞ்சினுன்.

அப்போது அந்தப் பரிசுத்தவான் அவனைப் பார்த்து: நீ லோகத்திலே அதிகமாய்த் தேடின நன்மையைப் பெற்று அநுபவித்தாச்சுது என்று நினைத்துக்கொள். இவன் முன்னே உபத்திரவப்பட்டு, பத்தியும் பொறுமையுமாய் மோட்சத்துக்குக் காத்துக்கொண்டிருந்தான். இப்போது இவன் நாடின மோட்ச மகிமையைப் பெற்று அநுபவிக்கிறுன். நீயோ உன் நிர்விசாரத்துக்குந் துர்க்குணத்துக்கும் ஏற்ற ஆக்கினையை அநுபவிக்கிறுய். இதல்லாமல் எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே ஒரு பெரிய பிளப்புண்டு. இவ்விடத்திலிருக்கிறவர்கள் அவ்விடத்துக்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருக்கிறவர்கள் இவ்விடத்துக்குக் கடந்துவரவும் மனதிருந்தாலும் கூடாது. முன் நல்லவர்களும் பொல்லாதவர்களுங் கலந்திருந்தபடி இப்போது இங்கே இருக்கக் கூடாது. அவனவன் முன் தான் நடந்த ஆகாதவழியும் நல்லவழியும் முடிகிற இடத்திலே என்றென்றைக்கும் இருப்பான். உன் வழி எப்படிப் போச்சுதென்று பார். முன் அதை நீ நம்ப இல்லை. அவன் நம்பி நல்ல வழியிலே நடந்து, இவ்விடத்திலே வந்து சந்தோஷப்படுகிறுன் என்றுர்.

அப்போது அவன்: எனக்கு இனி அந்தப் பாக்கியங் கிடைக்கிறதற்கு இடமில்லாமல் போனுலும், லோகத்திலே என் ஐந்து சகோதரர் அண்டையிலே போய், அவர்கள் என்னைப் போலே நிர்விசாரமாய்த் துன்மார்க்கமான வழியிலே நடந்து, இவ்விடத்து கஸ்தியிலே வராதபடிக்கு, அவர்களை எச்சரிக்கச் சொல்லும் என்றுன்.

அதுக்கு அவர்: தேவவசனமாகிய சத்திய வேதம் அவர்களுக்கு உண்டே; அதைப் பிரசங்கிக்கிற போதகரை அவர்

கள் கவனமாய்க் கேட்டு, அவ்விடத்து உபாதைகளுக்குத் தப்பிப்போகவும், மோட்ச பாக்கியத்தைப் பெறவும் படித்தறியட்டும் என்றார்.

அப்போது அவன்: அப்பாரே, அது போதாது என்று சொல்லி, தேவவசனத்தை அசட்டைபண்ணுகிற தூர்க்குணத்தை இன்னம் நரகத்திலுங் காண்பித்து, மரித்தோரில் ஒருவன் அவர்களண்டை போனால், குணப்படுவார்களென்று அவபத்தியாய்ச் சொன்னான்.

இதுக்கு அவர்: அவர்கள் தேவவசனத்தை அசட்டைபண்ணினால், மரித்தோரில் ஒருவன் எழுந்திருந்து அவர்களை எச்சரித்தாலும், நம்ப மாட்டார்களென்று சொன்னார். அத்தோடே அந்தப் பேச்சு முடிந்தது.

பாருங்கள், சிநேகிக்கப்பட்ட தமிழரே, இப்போது உங்களுக்கு அறிவிக்கப்படுகிற தேவவசனத்தை அசட்டைபண்ணாதேயுங்கள். அவனுக்கு வந்த மனஸ்தாபம் உங்களுக்கும் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் விழித்து, கண்ணைத் திறந்து: நான் இந்தமட்டும் இருந்த வழி என்ன; அது எங்கே போய் முடியுமென்று ஆய்ந்தோய்ந்து பாருங்கள்.

நீங்கள் உங்கள் வேதத்தை விட்டுச் சத்தியவேதத்தை ஏற்றுக்கொண்டால்: எங்கள் உறமுறையார் சிநேகிதர் என்ன சொல்லுவார்கள்; எங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வரும். நாங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்களானால், எங்களைத் தள்ளிப்போட்டுப் பகைப்பார்களே. எங்களுக்கு என்னென்ன உபத்திரவம் வருமோ என்று சந்தேகப்படாதேயுங்கள். ஒரு வியாதிக்காரன் தன் வியாதி நீங்குகிறதற்கு எத்தனை கசப்பான அவிழ்தங்களைச் சாப்பிடுவான். ஒரு பெரிய உத்தியோகம் பெரிய ஆதாயங் கிடைக்கிறதற்கு ஒரு மனிதன் எத்தனை பிரயாசப்படுவான், மோட்சத்தை இழந்து நரகத்திலே விழுகிறது அதிக நஷ்டமாச்சே. உங்கள் பாவந் தீர்ந்து, மோட்சம் உங்களுக்குக் கிடைத்தால், உங்களுக்கு எத்தனை ஆதாயம்.

ஆகையினால் இந்தப் பெரிய காரியத்திலே மேலெழுச்சியாயிராதேயுங்கள். சந்தேகமுங் கேடுமான வழியை விட்டு, மோட்சத்திற்குக் கூட்டிக்கொண்டுபோகிற நிலைவரமான வழியிலே உட்படுங்கள். தூக்கத்திலிருக்கிறப்போலே இராமல், உங்கள் வசமாய்த் திரும்புங்கள். கண்ணைமூடிக்கொண்டு

மோசம் போகாதேயுங்கள். சத்திய வேதம் என்கிற வெளிச்சம் உங்களுக்குப் பிரகாசிக்கிறது. இதினால் நன்மை தின்மை மெய் பொய் என்ன என்று அறியக் கூடும். உங்கள் பாவந் தீர்ந்து மோட்சங் கிடைக்க, உங்கள் தவசிகள் பஞ்சாக்கினியிலிருந்து தவசு பண்ணுகிறதுபோலே, நாங்கள் உங்களைத் தவசுபண்ணச் சொல்லி வருத்தப்படுத்துகிறதில்லை. மனந் திரும்புங்கள், குணப்படுங்கள்; அதே மெய்த் தவசு.

உங்கள் பாவந் தீர வேண்டுமென்கிற கவலை உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் பண்ணிக்கொண்டுவந்த பாவக் குற்றங்களும் மனதிலேயிருக்கிற மூவாசைகளும் எத்தனை கேடாயிருக்கிறதென்கிறதையும், உங்கள் மாங்கிஷ இச்சையினாலும் மாய்கையினாலும் பொய் இருவாதிரந் தந்திரங் கபடு பெருமை அநீதஞ் சண்டை எரிப்பு மற்றத் துர்க்குணங்களினாலும் எத்தனை ஆக்கினை வரும் என்கிறதையும் நன்றாய் உணர்ந்தறிந்து, அதுக்காக மனஸ்தாபப்பட்டு, துக்கம் அடையுங்கள். இனி அதுக்காக ஆக்கினைப்பட்டு மனஸ்தாபப்படுகிறதைப் பார்க்கிலும் இப்போது அதுக்காக மனஸ்தாபப்பட்டு, பராபரனுக்கு அதை அறிக்கைபண்ணி மன்னிப்பு கேட்கிறதே வாசி.

இந்தப்பாவங்களிலே இனிமேல் இருக்காமல், அது உங்களை நரகவேதனைகளுக்கு இழுத்துக்கொண்டுபோமென்று நினைத்து, அதுகளை வெறுத்துத் தள்ளிப்போடுங்கள். நீங்கள் இப்படி மனஸ்தாபப்பட்டு, உங்கள் பாவங்களுக்காக உத்தரவாதம் பண்ணின கிறிஸ்து இயேசுநாதரைப் பார்த்து: ஆ, என் இரட்சகரே, நீர் என் பாவங்களை ஏற்றுக்கொண்டு, நான் படவேண்டிய ஆக்கினையை நீர் பட்டு உத்தரித்து, என்னைப் பாராபரனோடே ஒப்பரவாக்கினீரே; எனக்கு இரங்கும். நான் பண்ணின பாவங்களை மன்னித்துவிடும். உம்மைப் பக்தி விசுவாசமாய் நம்பிப் பிடிக்கிறேன். உம்மை யல்லாமல் எனக்கு வேறே இரட்சகர் இல்லை. தேவரீர் தான் எனக்கு ஒன்றான இரட்சகர், நீரே என்னை ஆற்றித்தேற்றும். என்னிடத்திலிருக்கிற துர்க்குணங்களை நீக்கி, என் மனதைச் சுத்தம்பண்ணும். நான் இனி பாவமான வழியிலே நடந்து கெட்டுப்போகாமல், உம்முடைய பரிசுத்தமான மோட்சவழியிலே நடக்க எனக்கு ஒத்தாசைபண்ணுமென்று அவரைக் கெஞ்சிவேண்டிக்கொள்ளுங்கள்.

இப்படி முன் இரட்சிக்கப்பட்டு, இப்போது மோட்சத்திலே இருக்கிறவர்கள் லோகத்திலே குணப்பட்டு, தங்கள் பாவங்களுக்காகத் துக்கித்து, கிறிஸ்துநாதரைப் பார்த்துக் கெஞ்சி, பாவமன்னிப்பும் இரட்சிப்பும் அடைந்து, கரையேறி, பாக்கியவான்களாய்ப் போனார்கள். அப்படி இப்போதும் லௌகிகக் கவலையைப் பார்க்கிலும் அதிக ஆத்துமக் கவலையாகி, இரட்சித்தப்பட்டுக் கரையேறவேண்டுமென்று ஆசையாயிருக்கிறவர்கள் மனந்திரும்பிக் குணப்பட்டு, தங்கள் பாவக்குற்றங்களை அறிந்து துக்கப்பட்டு, இயேசுநாதரிடத்திலே கிருபையையும் மன்னிப்பையுந் தேடி, இரட்சிப்பையும் ஆறுதலையும் பெற்றநுபவிக்கிறார்கள்.

நீங்களும் இந்த விதமாய் உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, உங்களுக்கும் இரட்சகராயிருக்கிற இயேசுநாதர்பேரில் பத்திவிசுவாசமாய் இருந்து, முன் சொன்னபடி உண்மையுங் கருத்துமாய்க் கெஞ்சிமன்றாடினால், அவர் உங்கள் பாவக்குற்றங்களை நீக்கி: மகனே, திடன் கொள்; உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று முன்னே தம்மண்டையிலே வந்து, துக்கமாய்க் கெஞ்சின ஒரு குணப்படுகிற பாவிக்குச் சொன்னதுபோலே, உங்களுக்குஞ் சொல்லி, உங்களை ஆற்றித்தேற்றி முசிப்பாற்றி, மன அமைச்சலையும் மன ரம்மியத்தையும் ஆத்தும ஆரோக்கியத்தையும் ஞான சந்தோஷத்தையும் மோட்ச நம்பிக்கையையும் உங்களுக்குக் கட்டளைபண்ணி, மரணபயத்தையும் நீக்கி, முன் ஒருக்காலும் அறியாத மனசந்தோஷத்தை உங்களுக்கு ருசிக்கக் கொடுத்து, உபத்திரவங்களிலேயுங்கூடப் பலத்த ஆறுதலுமாயிருந்து, மோட்சவழியிலே உங்களைக் கூட்டிக்கொண்டு போவார்.

இப்போது சொல்லப்பட்ட நன்மைகள் எல்லாங் குணப்பட்டுப் பாவமன்னிப்பை அடைந்தவர்களுக்குக் கிடைக்கும். ஏனெனில் பாவந் தீர்ந்து மன்னிக்கப்பட்டதென்றால், எல்லாக் கவலையுந் தீர்ந்தது. ஒரு பொல்லாப்புக்கும் நரகத்திற்கும் பயப்படத் தேவையில்லை. எல்லாக் கலக்கமும் திகிலும் சாவுக்கு அவபத்தியுள்ளவர்கள் பயப்படுகிற பயமும் தீரும். கிறிஸ்துநாதர் உண்டாக்கின இரட்சிப்பிலே நமக்குப் பங்குஞ் சுதந்தரமுங் கிடைத்தால், நமக்கு எல்லாப் பாக்கியமும் கிடைக்கும். இன்றைக்கு நாளைக்குச் செத்தாலும், நாம் பயப்படோம்; மரணம் நமக்கு மிகுந்த ஆதாயம், மர

ணத்திலே தேவதூதாக்கள் நமது ஆத்துமத்தை மோட்சத்துக்குக் கொண்டுபோவார்கள்.

சிநேகிக்கப்பட்ட தமிழரே, இப்போது பாருங்கள். இது மெய்க்கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கும் பாக்கியம். லோகத்திலிருக்கிற பாக்கியம் இதுக்கு ஒப்பாகுமோ. லோகத்திலிருக்கிற எல்லாத் திரவியங்களையும் மகிமையையும் ஒருவன் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தாலும், இதுகளெல்லாம் அவனுக்கு மெய்யான சந்தோஷத்தையும் இரம்மியத்தையும் பாக்கியத்தையுங் கொடுக்கக் கூடுமோ. லோகவாழ்வு மாய்கையாய்ப்போம். இதெல்லாம் லோகத்திலே இருந்துவிடும்.

காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே

என்ற வசனம் எல்லாருக்குந் தெரிந்திருக்குமே. ஆனால் முன் சொல்லப்பட்ட பாக்கியங்களை எல்லாம் உங்களோடு கூடக் கொண்டுபோவீர்கள். இப்படியிருக்க, கிறிஸ்துமார்க்கம் இன்னம் உங்களுக்கு அற்பமாய்க் காணுகிறதோ.

ரு.

சன்மார்க்க வழி.

கிறிஸ்துவின்மேல் வைக்கும் பத்திவிசுவாசத்தினாலே இன்னங் கிடைக்கிற பலன் என்னவென்றால், நாம் புதுச் சிந்தை, புதுக்குணம், புதுச்சீவன் முதலானதுகளைப் பெற்றுக்கொண்டு, இப்படி மறுபிறப்பாய்ப் பிறப்போம். நீங்கள் ஏழுபிறப்பு உண்டென்றுசொல்லுகிறதெல்லாம் வீண்பேச்சு.

நாம் தாய் தகப்பனிடத்தில் நின்று பிறந்த பிறப்பு மாமிச பிறப்பு, பாவமான பிறப்பு. பாவத்துக்கு இணங்கிய துர்க்குணத்தோடே பிறந்தோமென்கிறது ஒவ்வொருவரிடத்திலுஞ் சிறுவயது துவக்கி வெளியாகிறது. சத்திய வேதஞ் சொல்லுகிறபடி மனிதருடைய நெஞ்சிலே கிளம்புகிற இச்சைகளும் விசாரங்களுஞ் சிறுவத்திலே துவக்கி ஆகாததாயிருக்கிறது. புத்தியும் பத்தியுமுள்ள வளர்ப்பில்லாதேபோனால், அதிகமான துர்ப்புத்தியுந் துர்க்குணமும் உண்டாகி, வெகுவிதமான துன்மார்க்கங்களுக்குந் தோஷங்களுக்கும் இடமாகும்.

ஆகையினாலே நாம் பிறந்து வளர்ந்த இந்த அசுத்தமான குணங்களோடே சுத்தமான மோட்சத்திலே சேருகிறது

கூடாத காரியம். அது தீர்ந்து சுத்தமான குணம் உண்டானால் ஒழிய மோட்சமே கிடையாது. பரிசுத்த பராபரனண்டையில் சேரவுங் கூடாது. முன் சொன்னபடி இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் விசுவாசத்தினாலே இந்தத் துர்க்குணம் நீங்கி, நற்குணம் உண்டாகும். நம்முடைய நினைவு ஆசை கவனங்கள் வேறாய்ப்போம். நாம் பேணிவைத்த ஆகாத விசாரங்கள் கரமகுரோதங்கள் பெருமை கோபம் மோகக் கவனம் பொல்லாத இச்சைகள் மாய்கையான சிந்தை நமக்கு மெத்த வெறுப்பாய்ப்போம். நம்முடைய புத்தி தெளிவாகி, நம்முடைய ஆத்துமத்துக்கு நன்மையானதுகளை அறிந்து சிந்தித்து, பராபரனுக்குப் பிரியமாயிருக்கிறதுகளை நாமும் ஆசித்து, பாவஞ் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, பராபரனுடைய கட்டளையின்படி நடக்க வேண்டுமென்கிற மன உற்சாகமுஞ் சாமர்த்தியமும் நமக்கு உண்டாகும்.

நாம் விசுவாசமாய்ப் பற்றிப்பிடிக்கிற கிறிஸ்து இயேசு நாதர் தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு மேன்மையான இந்தப் புதுச்சிந்தையை நம்மிடத்திலே உண்டாக்குகிறார். இவர் தம்முடைய வரங்களினாலே நம்முடைய புத்தியைப் பிரகாசிப்பித்து, நாம் முன் அறியாத பராபரனுடைய சித்தத்தை வெளிப்படுத்தி, பாவங்களை வெறுக்கவும் முன் செய்யக்கூடாதிருந்த புண்ணியங்களைச் செய்யவும் நம்மைப் பலப்படுத்தி, உபத்திரவவேளையிலே நம்மை ஆற்றித்தேற்றி, பெலவீனத்திலே நமக்கு ஒத்தாசையாயிருந்து, பொறுமையையுஞ் சாந்த குணத்தையும் தாழ்மையையும் மெத்தனவையும் சிநேகத்தையும் பரம சிந்தையையும் நம்மிடத்திலே உண்டாக்கி, பரிசுத்த மோட்சவழியிலே நம்மை உட்படுத்தி, அதிலே நடத்தி காக்கிறார்.

பாருங்கள்; முன் ஆகாத மனிதனாயிருந்தவன் இந்த வழியாய்ப் புது மனிதனாகிறான். முன் பராபரனுக்கு வெறுப்பாயிருந்தவன் இப்போது பராபரனுக்கு உகந்தபிள்ளை. பராபரனுக்கும் இப்படிப்பட்டவனுக்கும் அன்னியோன்னிய ஐக்கியம் உண்டாகிறது. பராபரன் இவனுக்குப் பட்சமுள்ள தகப்பன், இவன் பராபரனுக்குப் பிரியமான பிள்ளை. பராபரனுடைய தயவிலேயும் கிருபாகடாட்சத்திலேயும் நன்மை பாக்கியத்திலேயும் இவனுக்குப் பங்குஞ் சுதந்தரமுங் கிடைக்கும். பாருங்கள்; இதே உத்தம பாக்கிய நிலைமை.

இப்படி மறுபிறப்பாய்ப் பிறந்த மெய் விசுவாசமுள்ள கிறிஸ்தவன் பரிசுத்த வழியிலே நல்ல நடக்கையாய் நடக்கவும், நற்கிரியைகளைச் செய்யவும், பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவுஞ் சமர்த்தனாகிறான்.

பராபரன் கொடுத்த பத்துக் கற்பனைகள் எல்லாம் இரண்டு பெரிய கற்பனைகளிலே அடங்கியிருக்கிறது.

க) எல்லாத்தையும் பார்க்க ஒன்றான கர்த்தருஞ் சிருஷ்டிகருமாயிருக்கிற உன் பராபரனை முழு மனதினாலுஞ் சிநேகித்துக்கொள்

உ) பிறத்தியாராகிய மற்ற மனிதர்களை உன்னைப்போல் சிநேகித்துக்கொள்.

115869

இந்த இரண்டு கற்பனைகளிலே பத்து விசேஷித்த கற்பனைகள் அடங்கியிருக்கிறது.

முதலாம் பெரிய கற்பனையின் படியே நமக்கு ஒன்றான கர்த்தரும் சிருஷ்டிகருமாகிய பராபரனை எல்லாத்தையும் பார்க்க முழுமனதினாலுஞ் சிநேகிக்க வேண்டுமென்றால், நாம் முதல் அவரை அதிகமதிகமான பிரகாரமாய் அறியப் பிரயாசப்பட்டு, எல்லாத்தையும் பார்க்க அவரை மகிமைப்படுத்தி, அவரை எல்லாத்திலும் மேலான நன்மையாக எண்ணிக் கொண்டு, அவருக்கு விரோதமான பாவங்களைச் செய்யாதபடிக்குப் பயந்து, அவரால் சகல நன்மை ஒத்தாசை இரட்சிப்பு ஆறுதல் மோட்சம் வருமென்று அவர் பேரில் நம்பிக்கையாயிருந்து, அவரை வணங்கி இஸ்தோத்திரம்பண்ணி, எல்லா நன்மையையும் அவருக்குள் பத்தியாய்த் தேடி மன்றாட வேண்டும்.

ஆகையினாலே அவரையல்லாமல் வேறே தேவர்களை வணங்கி, சுரூபம் சிலையை வைத்துக் கும்பிட்டு, தேர் திருவிழா பண்ணி, வேறொரு சிருஷ்டிப்புக்கும் வஸ்துக்களுக்கும் அவருக்குரிய சங்கையைக் கொடுத்து, இது முதலான வீண் பத்திகளைப் பண்ணுகிறது தெய்வ நிந்தையும் தூஷணமும் அருவருப்பான அக்கியானமுமாயிருக்கிறது.

உங்கள் சாஸ்திரஞ் சொல்லுகிறபடி இந்த லோகத்து இராசாவைப் போலே பராபரனுக்கு ஒரு மந்திரி பிரதானி தேவையில்லை. ஏனெனில் அவரே எங்கும் நிறைந்திருந்து எல்லாத்தையும் அறிகிறார். நம்முடைய மன்றாட்டுக் காரியஞ் செல்லும்படியாக, அவர் தம்முடைய ஒன்றான குமாரனாகிய கிறிஸ்து இயேசுவை நமக்குக் காரியக்கர்த்தாராகக் கொடுத்தி

ருக்கிறார். அவர் முன்னிலையாக நாம் வர வேண்டும். அவரும் பிதாவும் ஒன்றுதான். நாம் பிதாவைப் பார்த்து மன்றாடினாலுஞ் சரி, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பார்த்து மன்றாடினாலுஞ் சரி, இது இரண்டும் ஒன்றுதான்.

நீங்கள்: வெட்ட வெளியை நோக்கி ஒரு ரூபமில்லாமல் நாங்கள் கும்பிடுகிறதெப்படி என்றும், கண்ணுக்கு முன்பாக ஒரு விக்கிரகத்தை அவருக்குச் சாயலாக வைத்துக் கும்பிடுகிறது எல்லாஞ் சுவாமிக்குத் தான் செல்லும் என்றுஞ் சொல்லுகிறீர்களே. இதெல்லாம் வீண். ஏனெனில் மகிமையுள்ள பராபரனை எந்தச் சிருஷ்டிக்கு ஒப்பிடலாம். சிருஷ்டிகர் இருக்க, சிருஷ்டிப்புகளையாகிலும் உங்கள் கைக்கிரியைகளாகிய சுரூபங்களையாகிலுங் கும்பிடுகிறது மகா கனமான தோஷம். அவர் உண்டாக்கின மகா விஸ்தாரமான வானத்தையும் பூமியையும் அதிலே அடங்கியிருக்கிற மகத்துவமான கிரியைகளையும் நீங்கள் பார்த்து, இதுகளைச் சிருஷ்டித்த பராபரன் எங்கும் இருக்கிறாரென்று நினைத்து, எவ்விடத்திலேயும் அவரை வணங்குங்கள்.

முன் சொல்லப்பட்ட உபதேசங்கள் உங்களிடத்திலே பெலன் செய்தால், இப்படிப்பட்ட வீண்பத்தி எல்லாம் வெறுப்பாய்ப் போம். பரிசுத்தமான வழியிலே நடக்கிற பத்தியுள்ள கிறிஸ்தவன் வீண்பத்தியினாலே தன் பராபரனைத் தூஷணித்து மனஸ்தாபப்படுத்த மாட்டான். அவன் எங்குங் கர்த்தாவின் சமுகத்துக்கு முன்பாக நடக்கிறவனைப் போல் இருப்பான்.

பின்னையும் பராபரனைச் சிநேகிக்க வேண்டுமென்கிற கட்டளைக்கடுத்த விசேஷித்த இரண்டாங்கற்பனை என்னவென்றால், அவருடைய மகிமையுள்ள நாமத்தை வீணிலே வழங்கப் போகாது. பராபரனுடைய மகிமையுள்ள நாமத்துக்கு விரோதமாக உங்களுக்குள்ளே வழங்குகிற அநேகம் அவபத்திக்கடுத்த காரியங்கள் உண்டு. அது என்னவென்றால்:

உங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கும்போதும், பேரிடும் போதும், பள்ளிக்கூடத்தில் வைக்கும் போதும், கலியாணம் பண்ணும்போதும், சடங்குகள் செய்யும்போதும், வீடு கட்டும்போதும், கிரகப்பிரவேசம் பண்ணும்போதும், பயணம் புறப்படும்போதும், வியாதிப்படும்போதும், மற்ற நவமான காரியத்தைத் துவக்கும்போதும், முடிக்கும்போதும், சாகிறமட்டும் செத்த பிறகும் கிழமை நட்சத்திரம் திதி முக்

கணம் நவக்கிரகங்களுடைய நிலே பாவக்கிரகமென்றும் புண்ணிய கிரகமென்றும் நாள் நட்சத்திரம் பார்க்கிறதும், வழிச்சகுனம் பார்க்கிறதும், காதல் பார்க்கிறதும், திஷ்டி பார்வையும் நற்குறி துற்குறி பார்க்கிறதும், செத்த பிறகு குளிகை பார்க்கிறதும், சுவாமிவந்து என்பேரில் ஆட்கொண்டதென்று ஆடுகிறதும், பெண்டுகளேப் பேய் பிடித்ததென்று துஷ்ட தேவதையின் கோவிலிலே வைத்துத் தலேசுற்றி ஆட்டுகிறதும், மாத்திலே ஆணிகொண்டு அடிக்கிறதும், முன் நெற்றி மயிரை அறுக்கிறதும், இன்னம் பலவிதமான சாஸ்திர சகுனங்களேப் பார்த்து, இப்படி அடிமைகளேப்போல் பயந்து, இதற்கு வேண்டிய வீண்செலவுபண்ணி, உங்கள் பணங்களே ஆசித்துப் பிடுங்குகிற எத்தராலே ஏய்க்கப்பட்டு உங்களேயே மிகவுங் கெடுத்துபோடுகிறதும்தான்.

பராபரனுடைய கட்டளே இப்படி செய்யச் சொல்லுகிறதில்லே. அது தெய்வ நாமத்துக்கு மகிமை அல்ல. அதைத் தள்ளவேண்டும். பத்தியுள்ள கிறிஸ்தவன் பராபரனுடைய மகிமையுள்ள நாமத்தைப் பெரிய எண்ணிக்கையாக எண்ணி, இந்த லோக இக்கட்டுகளிலே அவரால் மாத்திரந் தனக்குத் தேவையான ஒத்தாசை எல்லாம் வருமென்றும், தனக்கு வேண்டிய மற்ற நன்மைகளேக் கொடுப்பாரென்றும் நம்பி, வீண்பத்தியினுலே தன்னேக் கஸ்திப்படுத்தாமல், அவரை நோக்கித் தைரியமுஞ் சந்தோஷமுமாக வேண்டிக்கொண்டு, அவருடைய திருநாமத்தைப் புகழ்ந்து இஸ்தோத்திரிக்கிருன்.

பின்னேயும் பராபரனேச் சிநேகிக்கவேண்டும் என்கிற பெரிய கற்பனேக்கடுத்த விசேஷித்த மூன்ருங் கற்பனே என்னவென்ருல்: கர்த்தருக்கு ஆராதனேசெய்யக் குறிக்கப்பட்ட திருநாட்களே அவருடைய மகிமைக்கேற்ற பிரகாரமாக ஆசரித்துக் கொண்டாட வேண்டும். உங்களுக்குள்ளே வழங்குந் தேர் திருவிழா நாட்களில் கோவில்களிலே நடக்குஞ் சடங்குகளும் மாய்கையான காரியங்களும் மகிமையுள்ள பராபரனுக்கும் மெய்ப்பத்தியுள்ள ஆராதனேக்கும் பொருந்தினதல்ல. அந்த விசேஷித்த நாட்களில் அறிவும் பத்தியும் விர்த்தியாவதற்குப் பதிலாக மற்ற நாட்களிலும் நடவாத அதிகமான பாவதோஷங்கள் நடக்கிறது. கிழமைதோறும் வேலேக்குக் குறிக்கப்பட்ட ஆறு நாட்களேத் தவிர, பராபரன் இன்னம் ஒரு நாளேத் தமக்கு மகிமையாகவும், தெய்வ ஆராதனே நடக்கவும், நமது ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும்

நன்மையாகவுந் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று வைத்தார். அந்த விசேஷித்த திருநாட்களில் கிறிஸ்துமான சபையார் கோவிலிலே கூடிவந்து, குருமார் செய்கிற ஞான பிரசங்கத்தையும், புத்தி தெளியவும் மனதிலே அதிகப் பத்தி உண்டாகவும் உதவியான தெய்வ நியாயங்களையும், நடக்க வேண்டிய நல்வழி, இக்கட்டுவேளையிலே பெற்றுக்கொள்ளும் ஆறுதல், பொல்லாதவர்களுக்குக் கிடைக்கும் ஆக்கினை, பத்தி விசுவாசமுள்ளவர்களுக்கு வரும் மோட்சபலன் இன்னதென்பதையுங் கேட்டிருந்து, பராபரனையும் இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவிலே தேறும்படியாகத் தெய்வ வசனங்களைப் படிப்பார்கள். அல்லாமலும் கர்த்தருக்கு இஸ்தோத்திரமாக ஞானப்பாட்டுகளைப் பாடி, ஒருமனப்பட்டுச் செபம்பண்ணி, இப்படியே தெய்வ ஆராதனையைத் தங்களுக்குப் பலனுகக் கொண்டாடுவார்கள்.

வீட்டிலேயும் அவர்கள் அவசரமில்லாத வேலைகளை அந்த நாட்களிலே நிறுத்தி, ஓய்ந்திருந்து, ஆத்தும இரட்சிப்புக் கடுத்தவைகளைத் தியானித்துக்கொண்டு, செபம்பண்ணி, கர்த்தருக்கு ஸ்தோத்திரமாகவும் தங்களுக்கு ஆசீர்வாதமாகவும் அந்த நாட்களை ஆசரிப்பார்கள். உங்களுடைய திருநாட்களுக்கும் எங்களுடைய திருநாட்களுக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் என்று பாருங்கள்; எது நலமென்று நீங்கள் தானே கண்டறியுங்கள்.

இரண்டாம் பெரிய கற்பனையின்படியே நாமு நமக்குப் பிறத்தியாராயிருக்கிற மற்ற மனிதரை நம்மைப்போல் சிநேகிக்க வேண்டுமே. இதிலே மற்ற ஏழுகற்பனைகளும் அடங்கியிருக்கிறது.

நாலாங் கற்பனையின்படியே தாய் தகப்பனையும் பெரியோர்களையும் குருமார்களையும் அதிகாரிகளையுஞ் சங்கித்து, அவர்கள் நமக்குச் சொல்லுகிற நல்லபுத்தியைக் கேட்டு, அவர்களுடைய கட்டளையின்படியே கீழ்ப்படிந்து நடந்து, அதிகாரிகள் இராச்சியபாரம்பண்ணிச் சமாதானமாய் நம்மைக் காக்கிறதற்குத் தேவையான பொதுச்செலவுக்காக வரி கொடுத்து, பெரியோர்கள் மற்ற உபகாரிகளால் நமக்கு வருகிற உபகாரங்களை நன்றியறிந்த மனதோடே ஏற்றுக்கொண்டு அநுபவிக்க வேண்டும். ஆனபடியினுலே தாய் தகப்பன்மார்களுக்கும் அதிகாரிகளுக்கும் பெரியோர்களுக்குங் காண்பிக்கும் மரியாதைதத்தாழ்ச்சி முண்டுத்தனம் நன்றிகேடு அவர்க

ளுக்கு மனஸ்தாபம் உண்டாக்கும் மற்றக்காரியங்கள் மகா அவலட்சணமுங் கர்த்தருக்கு வெறுப்புமாயிருக்கிறது.

ஐந்தாங் கற்பனையின்படி நாம் ஒரு மனிதனுடைய சரீரத்திற்கும் சீவனுக்கும் சுகத்திற்கும் வாழ்வுக்கும் ஒரு சேதமும் உண்டு பண்ணாமல், அவனவன் தன் நன்மையையுஞ் சுகத்தையுந் தடையில்லாமல் அநுபவித்துக்கொள்ள உதவியாயிருந்து, அதை வர்த்திக்கப்பண்ண வேண்டும்.

ஆறாங்கற்பனையின்படி நாம் சகல விபசாரம் வேசித்தனம் நம்முடைய சரீரத்திலாகிலும் மற்றவர்கள் சரீரத்திலென்கிலும் நடவாதபடிக்கு, வெட்கமும் இலச்சையும் அழுக்குமான நினைவு பேச்சு நடக்கைகளை மெத்தவும் வெறுத்து, நமது சமுசாரவாழ்க்கையிலே கற்புடையவர்களாயிருந்து, நம்முடைய ஆத்துமத்தையுஞ் சரீரத்தையுஞ் சுத்தமாய்க் காக்க வேண்டும்.

ஏழாங் கற்பனையின்படி நாம் ஒருவருடைய ஆஸ்தியையும் பணங்களையும் மற்ற உடைமைகளையுங் கட்டாயத்தினாலாகிலும் பல உபாயதந்திரத்தினாலென்கிலுந் திருடாமலும் அபகரித்துக்கொள்ளாமலும், அவனவன் வாழ்வுக்குச் சம்மதித்து, அதுக்கு நஷ்டம் வராமல் பார்த்து, விர்த்திக்கப்பண்ணி, அவனவன் தன் தன் சீர்நிருவாகத்திலேயும் பிழைப்பிலேயுந் திருப்தியும், பிறத்தியாருக்குக் கூடினமாத்திரம் உதவியுமாயிருக்க வேண்டும்.

எட்டாங் கற்பனையின்படி நாம் யாதொருவனுடைய சங்கையையும் நற்கீர்த்தியையும் கோள் பின்புறணி பொய்ச்சாட்சியினாலே சின்னப்படுத்தாமல், அவனுக்கு நன்மையானதுகளைப் பேசி, ஒருவன் குற்றத்தைப் பெரிதாக்காமல் பரிகரித்து, அவனவனுடைய சங்கையையும் நற்கீர்த்தியையுங் காக்க உதவியாயிருக்கவேண்டும். ஆனால் நம்முடைய குற்றங்களை மறைக்கவும் பொய் திருவாதிரம் புரட்டினால் நம்மைத் தப்புவித்துக்கொள்ளவும் பார்க்காமல், நாம் சொன்ன வார்த்தையிலேயும் உடன்படிக்கையிலேயும் நிதானமும் உண்மையுமாயிருந்து, நம்முடைய காரியத்திலேயும் மற்றவர்கள் காரியத்திலேயுங் கொடுக்கல் வாங்கலிலேயும் நாணயத்தைக் காப்பாற்றி, நம்பிக்கையுள்ளவர்களாய்ப் பேசி நடக்கவேண்டும்.

ஒன்பதாம் பத்தாங் கற்பனைப்படி நாம் மற்றவர்களுடைய வீடு பெண்சாதி வேலைக்காரர் ஆடு மாடு நிலம் சீர்

மண் மனை மற்றதுகளையும் ஆசிக்காமலும், அதைத் தக்குவித்துக்கொள்ள உபாயதந்திரமான யோசனை நினைவில்லாமலும், ஒருவருடைய ஆஸ்தியை வாழ்வை வன்கண்ணைப் பார்க்காமலும், மற்று முதலான ஆகாத ஆசை இச்சைகளை உள்ளுக்குள்ளே பேணிவைக்காமலும், சுத்த நினைவும் யோசனையுமாயிருந்து, ஆண்டவர் தன்னை வைத்த நிலைமையிலே அவனவன் சந்தோஷமாயிருந்து, தனக்குக் கொடுத்தது போதுமென்று மனரம்மியமாயிருந்து, மற்றவர்களுடைய வாழ்வையுந் தன் சுய வாழ்வையுந் தெய்வபத்தியினாலுஞ் சுறுசுறுப்பான வேலையினாலும் விர்த்திக்கப்பண்ணிக் காக்கவேண்டும்.

பாருங்கள், சிநேகிதரே, கிறிஸ்துமார்க்கமும் மோட்ச வழியும் மகா மேன்மையாயிருக்கிறதுமல்லாமல், பரிசுத்தமுமாயிருக்கிறது. மெய்க்கிறிஸ்தவர்கள் இந்த வழியிலே நடக்கப் பிரயாசப்படுவார்கள். இப்படி உண்மையாய்ப் பிரயாசப்படுகிறவர்கள் இன்னந் தங்களிடத்திலே வெகு தப்பிதந் தாழ்ச்சி உண்டென்று அறிந்து ஒத்துக்கொள்ளுவார்கள். ஆனால் அதுக்காகப் போக்குச் சொல்லாமல், தங்களைத் தாழ்த்திபண்ணி, குற்றங்களை அறிக்கையிட்டு, கர்த்தரிடத்திலே பாவமன்னிப்பைக் கேட்டு, பாவசோதனையிலே விழாதபடிக்கு விழிப்பாயிருந்து, செபம்பண்ணிக்கொண்டு, வேண்டுமென்று மனதறிந்து ஒரு பாவஞ் செய்யாமல், எங்கும் நிறைந்திருந்து எல்லாத்தையும் அறிந்திருக்கிற கர்த்தருக்கு முன்பாக மனச்சாட்சியைச் சுத்தமாய்க் காத்துக்கொண்டு, நன்மை புண்ணியந் தெய்வபத்தி பரமசிந்தையிலே தேறி விர்த்தித்துப்போகப் பிரயாசப்படுவார்கள்

இந்தமட்டுஞ் சொல்லி விஸ்தரித்துக்கொண்டுவந்த கற்பனைகளை எண்ணாமல், மேலெழுச்சியாயிருந்து, அதுகளை மீறி நடந்து, ஞான உணர்வில்லாமல் தங்கள் ஆயுசின் நாளைப் பாவங்களிலும் அன்மார்க்கங்களிலும் போக்கிறவர்கள் ஆண்டவருடைய கோபாக்கினைக்குத் தப்பமாட்டார்கள். மோசம் போகாதேயுங்கள், ஆண்டவர் தம்மைப் பரியாசம் பண்ண ஒட்டார். மனுஷன் என்னத்தை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்ச இச்சையை அச்சமில்லாமல் நிறைவேற்றி, உல்லாசமாய்த் திரிந்து, துர்க்கிரியை செய்கிறவன் விஷமுள்ள களையை விதைக்கிறவனைப்போலிருந்து அழிவை அறுப்பான்.

ஒருவேளை இவ்வுலகத்திலேயே கர்த்தருடைய கோபாக்கினை அப்படிக்கொத்தவர்களைப் பிடிக்கும். வெகுபேர் செய்கிற துர்க்குணங்களின் நிமித்தம் இவ்வுலகத்தில் தானே அவர்களுக்கு வியாதி பெலவீனம் நஷ்டம் கேடுபாடு தரித்திரம் தண்டனை அடி இலச்சை சங்கையீனம் காவல்கட்டு விலங்கு தொழு, இது முதலான ஆக்கினை தண்டனை வருகிறதுமல்லாமல், அவர்கள் செத்தபின் மறுமையிலே அதிலும் அதிக பயங்கரமான கஸ்தி உபாதைகளையும் அனுபவிப்பார்கள் என்கிறதற்குச் சந்தேகமில்லை.

ஒருவேளை இவ்வுலகத்திலே மாய்கையான சிந்தையாய்த் திரிகிற லோகமனிதர் பேரிலே நிற்கும் பராபரனுடைய கோபமுஞ் சாபமும் புறம்புக்கு அத்தனை வெளியாகாது. அவர்கள் பெரியோர்களும் ஆஸ்திக்காரருமாய் வாழ்ந்து, சிறியவர்களை நிஷ்டூரப்படுத்தி, வெகுவிதமான துன்மார்க்கங்களைச் செய்து, அநீதங்களைப் பண்ணி, ஆண்டவருக்கும் மனிதருக்கும் பயப்படாமல், அச்சங்கெட்டவர்களாய் நடந்து, தங்கள் மாமிச இச்சையிலே சந்தோஷமாயிருந்தாலும், அவர்களுக்கு ஒருக்காலும் மனஅமைதல் இல்லை; மெய்ச் சந்தோஷமும் மோட்ச நம்பிக்கையும் ஒருக்காலும் அவர்களுக்கு இல்லை. இதற்குப் பதிலாக அவர்கள் உள்ளுக்குள்ளே ஐயம் பயம் திகில் நடுநடுக்கம் மனவேசாறல் சாவுக்கு அஞ்சுகிற குணம் வெகுவாய் அவர்களை வாதிக்கும். செத்தபின் அவர்கள் சந்தோஷந் துக்கமாகவும், அவர்கள் சிரிப்பு அழுகையாகவும் போம். அவர்கள் காரியம் எல்லாம் மெத்த பரதாபமாயிருக்கும். முன் சொல்லப்பட்ட ஐசுவரியவானுக்கு நடந்ததுபோல் நடக்கும். தொகையாய் அவர்கள் முடிவு மகா பயங்கரம்.

ஆனால் தெய்வகட்டளையின்படி தெய்வபத்தியாய் நடக்கிறவர்களுக்குக் கிடைக்கிற பலன் சொல்லிமுடியாது. ஏனெனில் தெய்வபத்தி எல்லாத்துக்கும் பிரயோசனமும் இம்மையிலும் மறுமையிலும் வெகு பலன் கிடைக்க உதவியுமாயிருக்கிறது. அவர்கள் தாங்கள் பற்றிப்பிடிக்கிற பராபரனும் இயேசுகிறிஸ்துவும் எத்தனை தயவுள்ளவராயிருக்கிறாரென்று ருசித்து, அவருடைய சிநேகத்தையுங் கிருபையின் சுகிர்தத்தையுங் கண்டறிந்து அநுபவிக்கிறார்கள். தங்கள் பாவம் மன்னிக்கப்பட்டுத் தீர்ந்ததென்று அறிந்திருக்கிறபடியால், அவருடைய கோபாக்கினைக்குப் பயந்து, திகிலடைந்து, பொல்லாதவர்க

ளைப்போல் தங்கள் நாட்களை நடுக்கத்தோடுந் திகிலோடும் பயத்தோடும் போக்கத் தேவையில்லை.

தெய்வபத்தியுள்ளவர்களுக்குள்ளே பெரியோர்கள் உத்தியோகஸ்தர் உண்டாயிருந்தால், அவர்கள் அதுக்காக வீம்புபேசிப் பெருமைபாராட்டாமல், தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்கள் பராபரனுடைய தயவினாலே தங்களுக்குக் கிடைத்ததென்று அறிந்து, அவரை அதுக்காக ஸ்தோத்திரம் பண்ணி, மட்டுமிஞ்சாமல் மரியாதையாய் அதை அநுபவித்து, தங்கள் அதிகாரத்தையும் ஆஸ்திகளையுந் தங்களுக்கு மாத்திரம் அல்ல, மற்றவர்களுக்கும் அநுகூலமாகவும் ஏழைகளுக்கும் உபகாரமாகவும் கையாடுவார்கள்.

தெய்வபத்தியுள்ளவர்களுக்கு இவ்வுலகத்திலே பெரிய உத்தியோகம் நிரம்ப ஆஸ்தி பாஸ்தியில்லாமலிருந்தாலும், உண்கவும் உடுக்கவும் ஆண்டவர் தங்களுக்குக் கொடுக்கிறது போதுமென்றிருக்கிறார்கள். அவர்கள் இந்த லோகத்திலே தங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிவைக்க வேண்டுமென்று ஆசிக்காமல், அதிலும் அதிகமான ஞான நன்மைகளைத் தங்கள் உள்ளத்தில் அநுபவித்து, தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட அலுவல்களில் உண்மையுஞ் சுறுசுறுப்புமாயிருந்து, தங்கள் ஆத்துமத்தை அதிகக் கவலையாய்ப் பராமரித்து, மரணபயமின்றி ஆண்டவர் அதின் வழியாய்த் தங்களை மோட்ச இராச்சியத்திலே ஏற்றுக்கொள்ளுவாரென்று நம்பி, தங்கள் நாட்களைப் பின்னிடுவார்கள்.

ஒருவேளை தெய்வபத்தியுள்ளவர்களுக்குள் அஷ்டதரித்திரரும் இக்கட்டை அநுபவிக்கிறவர்களும் மனிதராலே கைவிடப்பட்டவர்களும் இருந்தால், ஆண்டவர் தங்களை மறந்து கைவிட மாட்டாரென்று அவர்கள் நம்பி, தங்களுடைய உபத்திரவங்களைப் பொறுமையாய் உத்தரித்து, தங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளே தங்களுக்குத் தேவையான உதவி ஒத்தாசை ஆறுதலைத் தேடிப் பெற்றுக்கொண்டு அநுபவிக்கிறதினாலே, அவர்களுடைய உபத்திரவங்கள் லேசாகும். அவர்கள் சரீரத்தின்படி இக்கட்டுப்பட்டாலும், அவர்கள் ஆத்துமத்தின்படியே கர்த்தருக்குள் அதிக சந்தோஷமாய் வாழ்ந்து, மறுமையிலே எல்லா உபத்திரவத்துக்கும் நீங்கலாகி, மோட்சவாசிகளுக்குக் கிடைத்திருக்கிற நித்திய வாழ்வு தங்களுக்குக் கிடைக்குமென்று நம்பி, தைரியமுஞ் சந்தோஷமுமாய்த் தங்கள் நாட்களைப் பின்னிடுவார்கள்.

தொகையாய்த்தெய்வபத்தியுள்ளவர்கள் பெரியோராயிருந்தாலுஞ் சிறியோராயிருந்தாலும், சீமான்களாயிருந்தாலுந் தரித்திரராயிருந்தாலும், ஆண்பிள்ளைகளாயிருந்தாலும் பெண்பிள்ளைகளாயிருந்தாலும், அவர்களுக்குள்ளே நிர்ப்பாக்கியர் இல்லை. இதற்கெதிரிடையாக இந்த நல்ல வழியாய் நடக்காத அவபத்தியுள்ளவர்கள் பெரியோராயிருந்தாலுஞ் சிறியோராயிருந்தாலும், சீமான்களாயிருந்தாலுந் தரித்திரராயிருந்தாலும், அவர்களுக்குள் மெய்ப்பாக்கியர் இல்லை.

௯.

புத்திமதி.

நீங்கள் உட்பட்டு நடக்கவேண்டிய மோட்சவழி இன்னதென்றும், அதினால் கிடைக்கும் பலன் இன்னதென்றும், அதை அசட்டைபண்ணுகிறவர்களுக்கு வரும் ஆக்கினை இன்னதென்றும் இந்தமட்டுங் கேட்டீர்களே. இப்போது நீங்கள் எந்த வழியைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிறதைப் பகுத்தறிந்து பாருங்கள். நாங்கள் உங்களைச் சிநேகித்து, உங்கள் நன்மையையும் ஆத்தும ஈடேற்றத்தையுந் தேடி, அதை உங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லிக் காண்பித்தோம்.

நீங்கள்: இதுகள் எல்லாம் வேண்டாம்; முன்னிருந்தபடியே இருந்துவிடுவோம்; என்ன வந்தாலும் வரட்டுமென்று மேலெழுச்சியாய்த் தள்ளிவிட்டால், நாங்கள் சொன்னது மெய்யென்று கண்டு நீங்கள் அதை ஒப்புக்கொள்ளாததற்காக மனஸ்தாபப்படுங் காலம் வரும். எப்படியும் கிறிஸ்துமார்க்கம் இத்தனை மேன்மையுள்ளதென்று காண்பிக்கப்பட்டபடியினாலே, நீங்கள் இனிமேல் அதைத் தூஷணித்துப் பழித்துப் பேசாமலாவது இருப்பீர்களென்று நம்புகிறோம்.

பின்னையும் கிறிஸ்துமார்க்கத்தில் இருக்கிறவர்கள் எல்லாரும் அதின்படி நடக்கவில்லையே என்று தடுக்கல் அடையாதேயுங்கள். மெய்க்கிறிஸ்தவர்களும் உண்டு, பொய்க்கிறிஸ்தவர்களும் உண்டு என்கிறதை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆத்துமக்கவலையில்லாமல் லௌகிக நோக்கமாய் வந்து, சரீரப் பிழைப்புக்கென்று ஞான உபதேசத்தைக் கேட்டு, ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் உண்டு. அவர்கள் அந்தச் சிந்தையோடுதானே இருந்து, மனந் திரும்பாமல் கிறிஸ்துமார்க்கத்

தைப் பல துர்க்குணத்தினாலே இலச்சை படுத்தினால், அது மார்க்கத்தின் குற்றம் அல்ல. எப்படியும் அடிக்கடி குருக்களாலே எச்சரிக்கப்பட்டு, அடிக்கடி தெய்வ வசனத்தைக் கேட்டு, அதினால் எழுப்பப்பட்டு, மனந்திரும்பி மோட்ச வழியில் உட்பட்டு நடக்கிறவர்களும் உண்டு.

ஆனால் எவர்கள் முற்றிலுந் தங்கள் துர்க்குணத்தில் தானே நிலைத்திருந்து, குணப்படாமல் சாகிறார்களோ, அவர்களுக்கு அதிக ஆக்கினை வருமென்கிறதற்குப் பிசகில்லை. ஏனெனில் கிறிஸ்து இயேசுநாதர் சொல்லுகிறபடி, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசம் இல்லாதவனோ (ஞானஸ்நானம் பெற்றாலும்) ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். ஆகிலும் உங்களுக்குள்ளே அநேகம் பேர் ஞானஸ்நானம் பெற்று, சபையிலே உட்பட்டதற்காக இப்போது நிரம்பச் சந்தோஷப்பட்டு, தங்களுக்குப் பெரிய பாக்கியம் திரவியங் கிடைத்ததென்று சொல்லி, பராபரனை வார்த்தையினாலுங் கிரியையினாலுந் துதித்து இஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். உங்களுக்குள் முன்னிருந்த இவர்கள் இப்போது அநுபவிக்கிற பலனை நீங்கள் அசட்டைபண்ணுகிறது நியாயம் அல்ல.

ஒன்றான பராபரனுக்குள்ளும் லோக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் உங்களுக்குக் கிடைக்க இடமாயிருக்கிற பெரிய பாக்கியம் உங்களுக்கு அற்பமுங் கொஞ்சத்தனமுமாய்க் காணுகிறதோ. அதைப் பார்க்கிலும் உங்கள் சாதி சனம் உறமுறையார் மாய்கையான மார்க்கம் ஆடம்பரம் உங்களுக்கு அதிகமாகக் காணுகிறதோ. வேண்டாம், பிரிய சிநேகிதரே. நீங்கள் ஞானஸ்நானம் பெற்று, இயேசு கிறிஸ்துவுக்குள் உண்டான இரட்சிப்பின் நன்மை பாக்கியங்களை அடைந்தநுபவிக்கிறதே எல்லாத்துக்கும் மேலான சிலாக்கியம்.

நீங்கள்: கிறிஸ்துமார்க்கத்தில் நாங்கள் அமர்ந்த கிறிஸ்தவர்களானால், எங்களுக்குச் சீரப்பிழைப்புமில்லை, எங்களைப் பராமரிப்பாருமில்லை என்று அவநம்பிக்கைப்படாதேயுங்கள். ஆத்துமத்தைப் பராமரிக்கிற பராபரன் உங்கள் சரீரத்தைப் பராமரிக்க மாட்டாரா. பராபரனுடைய மோட்ச இராச்சியத்தை முந்த முந்தத் தேடி, தன் தன் அந்தஸ்துக்குத் தக்கதாய்த் தன் அலுவல்களை உண்மையுஞ் சுறுசுறுப்பும்

ப்பத்தியுமாய்ச் செய்கிறவனை ஆண்டவர் கைவிடாமல், ...ய்ப் பராமரித்து விசாரிப்பாரென்கிறதற்குச் சந்தேகம்

...ாங்கள் இதுவரைக்கும் உங்கள் இரட்சிப்புக்கென்று ...ற்குச் சொல்லிவந்த உபதேசம் உங்களுக்கு அதிக ...ரமாய்த் தெரிய வேண்டுமானால், நீங்கள் சத்திய வேத புஸ்தகத்தைக் கருத்துங் கவனமுமாய் வாசித்துப் பாருங்கள். ஆண்டவரே உங்கள் புத்தியின் கண்ணைத் திறந்து, நன்மை திமை பொய் மெய் இன்னதென்கிறதை நீங்கள் கண்டறியவும், மோசமான வழியைத் தள்ளி மோட்ச வழியிலே உட்படவும் உங்களுக்கு மன உற்சாகத்தையும் நற்கருத்தையுங் கட்டளையிட்டருள வேண்டுமென்று நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் எல்லாருக்கும் ஆசீர்வாதமுண்டாவதாக.

சேபம்.

க. சேருலாவுதி ரித்துவதேவனே
...ருலாவும் இயாவும்படைத்தவா
நே...லாவுத வீதிறைநீடிய
எ...லாவும் இறைக்கிறிஸ் தேசுவே.

உ. ...அந்தமாதியி லாதபராபரன்
மைந்த...னைநரர் மாங்கிஷமாகியே
விந்தையாயெனை மீண்டிரட்சித்தவா
எந்தயாபர னேகிறிஸ் தேசுவே.

ங. அண்ணலார்க்கு மகிமையுண்டாகவும்
மண்ணிலேசமா தானம்வளரவும்
நண்ணுநற்பிரி யநரர்க்கெய்தவும்
எண்ண்மான இறைக்கிறிஸ் தேசுவே.

ச. கனியருந்துக டும்பகையால்வரும்
வினையொழிந்தவிண் வீடதுறும்படி
மனுடர்சங்க மகிழ்ந்தெழவந்தவா
எனையுவந்த இறைக்கிறிஸ் தேசுவே.

ரு. வார்த்தைமாங்கிஷ மாய்மனுடர்க்கெலார்
கோர்த்தபாவக் கொடூரமனைத்தையுந்
தீர்த்திரட்சைபு ரிந்ததிறத்தினால்
ஏற்றமீட்பன் இறைக்கிறிஸ் தேசுவே.

சு. ஆடுபட்ட அருங்கொலையாகவே
பாடுபட்டுப் பருங்குருசானதிற்
கேடுகெட்டவ ருங்கிருபைபெற
ஈடுபட்டிறந் தகிறிஸ் தேசுவே.

எ. அத்தனார்க்கடி யார்பிணையாளியாய்
மத்திஸ்தனென வார்த்தைதரும்படி
மெத்தவாதைய தாயுயிர்விட்டபின்
இத்தலத்தின் எழுங்கிறிஸ் தேசுவே.

அ. உற்றபாதையும் உண்மையுஞ்சீவனும்
நற்றவக்குரு வுநலமேய்ப்பனும்
மற்றஞானவ யித்தியனாகவும்
இற்றைநின்றை இறைக்கிறிஸ் தேசுவே.

கூ. ஞானநாயகன் நன்மணவாளன்மெய்
யானமைந்தன் அருமையிரட்சகன்
மானதேவ மகத்துவத்தவன்
ஈனமற்ற இறைக்கிறிஸ் தேசுவே.

௰. மேசையாமிசை யாஇசருவேலின்
ஆசையாநசை யாஅசையாஅருள்
ஓசையாஉசி யாசுசியாநச
ரேசையாஇசை யாகிறிஸ் தேசுவே.

௰௧. சாதியாவையுந் தான்புரந்தாளவே
மாதுமாமரி யாளிடம்வந்தவா
வேதநாயகன் பாடலைமேவிய
ஏதமற்ற இறைக்கிறிஸ் தேசுவே.

II.

☞ **On 20 Copies — 5 Copies,** *on* 10 *Cop.* — 1 *Copy* **gratis.**

☞ ஒரு புஸ்தகத்தில் உ௰ பிரதிக்கு ரு பிரதியும், ௰ பிரதிக்கு க பிரதியும் அதிகமாகக் கொடுக்கப்படும்.

Children's Treasure. பாலர் பொக்கிஷம்.	0	1	0
Abridgment of the Book of Concord. மெய்ப் போதக சாரம்.	0	0	6
Schwarz. Dialogues. விக்கிரப்பத்திகாரனுக்கும் கிறிஸ்தவனுக்கும் உண்டான சம்பாஷணை.	0	1	6
Life of Dr. Martin Luther. மார்த்தீன் லுத்தர் என்ற வேதசாஸ்திரியாரின் ஜீவிய சரித்திர சுருக்கம்.	0	1	0
Life of Barth Ziegenbalg. சீகன்பால்கு கிரேஷ்டர் ஜீவிய சரித்திரம்.	0	1	0
New Testament. புதிய ஏற்பாடு, 12mo.	0	8	0
Gospels and Acts. மாற்கு. லூக்கா. யோவான். அப்போஸ்தலர் நடபடி [illegible]	0	0	3
First Book. ஆதிமூல புஸ்தகம்.	0	1	0
Sheet Lessons. வாசக பாடம். Nr. 1—3.	0	1	0
do. do. Nr. 1—10.	0	2	0
Astronomy. வானசாஸ்திர சுருக்கம்.	0	0	6
Spiritual Songs. இனிமையான ஞானப்பாட்டுகள்.	0	6	0

III.

☞ **On 50 Copies — 25 Copies.** *on* 20 *Cop.* — 5 *Cop.* **gratis.**

☞ ஒரு புஸ்தகத்தில் ரு௰ பிரதிக்கு உரு பிரதியும், உ௰ பிரதிக்கு ரு பிரதியும் அதிகமாகக் கொடுக்கப்படும்.

True wisdom. மெஞ்ஞானம்.	0	0	6
First milk. கிறிஸ்துமார்க்க உபதேசத்தின் முதற்பால்.	0	0	3
Seven Reasons. மோட்சபாக்கியத்தை அடைய விரும்புகிறவர்கள் கவனிக்கவேண்டிய ஏழு நியாயங்கள்.	0	0	1
Customs of Native Christians. ஆசாரத்திலக்கு.	0	0	6
Tracts on Christian Missions. மிஷயோன் சரிதைகள். இரண்டு பங்குகள். ஒவ்வொன்றும்	0	1	0
Maria Ulff. மரியான் உல்பு.	0	0	3

TAMIL COPY-BOOKS. — தமிழ் கையெழுத்துச் சட்டப்புத்தகம். *per Doz.* 12 *As.* — *p. Copy As.* $1\frac{1}{2}$

Passion History. இயேசுநாதர் பாடுபட்ட சரித்திரம்.	0	2	0
Fabricius' Hymnbook 375 Hymns, ஞானப்பாட்டுகளின் புஸ்தகம் ௩௱௭௫ பாட்டுகள்.	0	12	[illegible]
Fabricius' Hymnbook with Tunebook. ஞானப்பாட்டுகளின் புஸ்தகத்தோடேகூட இராக புஸ்தகமும்.	0	14	[illegible]
School Hymnbook with tunes. ஞானப்பாட்டுமாலை. இதிலே ஞானப்பாட்டுகளோடே இராகங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.	0	6	
Tunebook to *Fabricius*' Hymnbook. ஞானப்பாட்டுகளின் இராகப் புஸ்தகம்	0	3	[illegible]
Church-Book தேவாராதனை மாலை.	0	12	[illegible]
Church-Book incl. *2nd*. Part of Agenda. தேவாராதனை மாலை திருச்செய்கைகளின் முறைமையோடே சேர்த்துக் கட்டியது.	1	0	0
Agenda *2nd*. Part. திருச் செய்கைகளின் முறைமை.	0	4	[illegible]
Formularies for Catechists etc உபதேசி. தேவாராதனை முறைமை.	0	2	0
Pocket Communion-Book. திருவிருந்தாடி.	0	2	
Samuel. Lent-Meditations. ஒருசந்தி நாள் தியானப் புத்தகம்.	0	5	
Schanz, Epistle Postille. பொஸ்தில்லவென்ற நிருப வாக்கிய பிரசங்க புஸ்தகம்.	1	8	[illegible]
Golden Treasury I. பராபரனுடைய பிள்ளைகளின் ஞானாபரணப்பெட்டி.	0	12	[illegible]
Müller's Hours of Spiritual Refreshment, I. & II.	1	0	0
ஞான முசிப்பாறும்நேரம். ௨-ம் பங்கு.	0	5	0
Löhe, Prayerbook. ஞானப்பூமாலை.	0	6	[illegible]
Arndt's Garden of Paradise. ஞானமந்திர செல்வப் பூங்காவனம்.	0	10	0
Arndt's True Christ. I. ஞானக்கண்ணாடி. ௧-ம் பங்கு.	0	8	0
Rules for Catechists. உபதேசிகளுக்குரிய சட்டங்கள்.	0	0	6
Old Testament. பழைய ஏற்பாடு.	0	8	0
New Testament. புதிய ஏற்பாடு, 8vo.	0	12	0
A[illegible]ypha. அப்போகிரிப்பாகமங்களின் புஸ்தகம்.	1	8	0
[illegible] குறள் மூலமும் உரையும். ௧. அறத்துப்பால்.	0	3	0
[illegible], I. & II. இதிலே அறத்துப்பாலும் பொருட்பாலும் அடங்கியிருக்கிறது.	0	8	0